802

தொகுதி 5.] 1926ஞு ஜூலைமீ 1௳ [பகுதி 6.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி.குப்புசாமிமுதலியார்



பிரசுரகர்த்தா
நா.முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம்,சென்னை.

OFFICE ... MADRAS
18 AUG 1926

# மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை நாவல்.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஸு பிப்ரவரிமீ 1வ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவழத்தீவு" "ஞான செல்வாம்பாள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று "அற்புத மர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான மூன்று நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமென்றி அவற்றின் சஞ்சிகைகள் கிடையா. "அற்புத மர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" வேண்டியவர்கள் சந்தாதாரராகச்சேர்ந்து சஞ்சிகை பெற்றுக்கொள்ளவேண்டும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. இதில் இப்போது வெளிவரும் ஷை நாவல் அடுத்த 1927ஸு ஜனவரிமீ த்துடன் 560-பக்கங்களுக்குள் முடியும். அதுவரை இதற்கு இந்த ஏழுமாதங்கட்கும் சந்தா ரூ. 1-8-0 ஒன்றரைதான். வெளிநாட்டிற்கு ரூ. 2—0—0 அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ இதற்கு முன் பணம் அனுப்பினால் ரூ. 1—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணுவுமாகும். வி-பி-யில் ரூ. 1—13—0 ஆகும்.

1926ஸு பிப்ரவரிமீ முதல் மனமோகினிக்குச் சந்தாதாராகச் சேர்ந்திருப்பவர்களுக்கு இந்நாவல் அச்சந்தாவிலேயே கிடைக்கும். மனமோகினிக்கு வருஷசந்தா ரூ. 2—8—0
வெளிநாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வந்திருக்கும் புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | 0 |
| பவழத்தீவு 2 பாகமும் | ,, | 3 | 0 | 0 |
| ஞான செல்வாம்பாள் 5 பாகமும் | ,, | 9 | 10 | 0 |

மானேஜர், "ஆனந்த நிலையம்"
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

18 AUG 192
MADRAS

உ

# அற்புத மர்மங்கள்

அல்லது,

## ஆனந்தலிங்கின் அஷ்டஜெயங்கள்.

### 1-வது அத்தியாயம்.

ஒருநாள் பிற்பகல் சுமார் இரண்டுமணி யிருக்கும். ஆனந்தலிங்கும் அவன் நண்பனாகிய விசுவநாதனும் ஒரு அறையில் உட்கார்ந்து சிற்றுண்டி யருந்தியபின் சம்பாஷித்துக்கொண் டிருக்கிறார்கள். குளிர்காற்று அதிகமாய் வீசிக்கொண்டிருக்கிறது. அச்சமயம் தந்திச் சேவகன் வந்து ஒரு தந்தியை ஆனந்தலிங்கிட மளித்தான். ஆனந்தலிங்கு அதை வாசித்துப்பார்த்து உடனே பதில் எழுதிக்கொடுத்து விட்டு மௌனமாக விருந்தான். இரண்டொரு நிமிடங் கழித்துச் சுருட்டுப் பற்றவைத்துக்கொண்டு எழுந்து நெகிடித் தீயினருகில் நின்று ஏதோ சிந்தனையிலிருந்தான். அடிக்கடி தந்தியை நோக்கினான். திடீரென்று திரும்பித் தன் நண்பனை நோக்கி, "நண்பனே! நீ பாஷா ஞானத்தில் நல்ல தேர்ச்சியுடையவன் என்று நம்புகிறேன்; விபரீதம் என்ற வார்த்தைக்கு என்ன பொருள் கூறுகிறாய்?" என்று கேட்டான்.

விசுவநாதன்:—சாதாரணமாய் மிக்க அதிசயமானது, அசாதாரணமானது என்று பொருள் கூறலாம்.

ஆனந்தலிங் சிரசை அசைத்து, "உண்மையில் அதற்கு மேல் அதில் பொருள் இருக்கிறது; பயங்கரமான, துயரமான என்ற பொருள் அதில் உள்ளடங்கி யிருக்கிறது;

186506.
186506

நீ இதுகாறும் என்னைப்பற்றி எழுதி வெளியிட்ட விஷயங்களைச் சிந்தித்துப்பார்; எத்தனைமுறை இந்த விபரீதம் என்ற வார்த்தையில் மிக்க கோரமான பெருங் குற்றங்கள் என்னும் பொருள் அடங்கியிருந்தது என்பது அங்கை நெல்லிபோல் விளங்கும்; பன்முறை அம்மாதிரி பெருங்களவிலும், கோரமான கொலையிலும் இவ்வார்த்தை உபயோகிக்கப்பட்டு விவகாரம் முடிந்திருப்பது எனக்கு நன்றாய் நினைப்பிலிருக்கிறது; ஆகையால் இந்த வார்த்தையைக் கண்டால் எனக்கு எச்சரிக்கை யுண்டாகிறது" என்றான்.

விசுவநாதன்:—"அப்படியாயின் இப்போது வந்த தந்தி சமாசாரத்தில் அது இருக்கிறதோ?" என்றான்.

அதன்மேல் ஆனந்தஸிங் வந்த தந்தியிலடங்கிய சமாசாரத்தைக் கீழ்க்கண்டபடி கெட்டியாய் வாசித்தான்:—

"இப்போதுதான் கேட்போர் நம்பத்தகாததும் விபரீதமுடையதுமான ஒரு சம்பவம் எனக்கு நேர்ந்தது; நான் உன்னிடம் அதைப்பற்றி ஆலோசிக்க அநுமதி யளிக்கிறாயா?

இப்படிக்கு, சுந்தரம்,

சௌக்குத்தெரு தபால் ஆபீஸ் முத்திரை" என்று வாசித்துவிட்டு "இதற்குப் பதில் அனுப்பவும் பணம் கட்டியிருக்கிறது" என்றான்.

விசுவ:—"இதை யனுப்பிய ஆசாமி ஆணா பெண்ணா?" என்றான்.

ஆனந்தஸிங் "சந்தேகமின்றி ஆண்மகனே; ஒரு ஸ்திரீயாயிருப்பின் ஒருபோதும் இவ்வளவு சமீபத்திலிருந்து பதில் அனுப்புவதற்குக்கூடப் பணங்கட்டித் தந்திசமாசாரம் அனுப்பமாட்டாள்; நேரே வந்துவிட்டிருப்பாள்" என்றான். நண்பன் "நீ அவனிடம் பேசப்போகிறாயோ?" என்றான்.

ஆனந்தஸிங்:—"நண்பனே! அக்கடைசிக் குற்றம் நடந்தபின் இதுகாறும் என் மனம் மிக்க வேதனையிலிருக்

கிறது; என் மனம் சதா ஓடிக்கொண்டேயிராவிட்டால் துண்டு துண்டாய்ப் பிய்ந்து போகக்கூடிய ஒரு சுறு சுறுப்பான எந்திரம் போன்றது; கொஞ்ச காலமாய் எல்லாம் நிர்ச்சந்தடியாயிருக்கின்றன; துணிகரமானதும், ஆச்சரிய சாமார்த்தியமானதுமாகிய குற்றங்களைச் செய்வோர்களெல்லாம் ஒய்ந்து விட்டார்கள் என்பது விளங்குகிறது. அப்படியிருப்பதனால் மறுபடியும் நெஞ்சு திடுக்கிடத்தக்க அபூர்வமும் மர்மமுமான விஷயங்களில் பிரவேசித்து வேலைசெய்ய வேண்டுமென்ற ஆவல் என் மனதிலிருக்கிறதாவென்பதைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? ஆ! இதோ பெரும்பாலும் நமது கட்சிக்காரனே வருவதாய்த்தெரிகிறது" என்றான்.

அச்சமயம் யாரோ நிதானமாய்ப் படிகளிலேறி வரும் சத்தம் கேட்டது. இரண்டு மூன்று விநாடிகளில் ஒருவன் அறைக்குள் வந்தான். அம்மனிதன் உயரமும் தடித்த தேகமுமுடையவன்; நரைகள் பொருந்திய மீசை யுடையவன்;மரியாதையான தோற்றமுடையவன்; அவன் நல்ல நிலைமையில் இருப்பவனென்பதும், சாதாரணமாய் நற்குணமும் நன்னடக்கையு முடையவனென்பதும் புலப்பட்டன. ஆனால் சமீபகாலத்தில் அவன் மனதிற்கு மிக்க கலக்கத்தையும் வியப்பையும் திகிலேயும் உண்டாக்கத்தக்க சம்பவம் எதுவோ நேர்ந்திருக்கவேண்டுமென்பது அவன் தோற்றத்தாலேயே நன்கு விளங்கியது. அவன் தலைமயிர்கள் சிலிர்த்துக்கொண்டு, முகம் கோபத்தால் சிவந்து, கண்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன. அவன் ஆத்திரங்கொண்டவனாகக் காணப்பட்டான்.

அம்மனிதன் நாற்காலியிலுட்கார்ந்ததும் மனப்பதைப் போடு ஆனந்தஸிங்கை நோக்கி, "எனக்கு மிக்க அபூர்வ

மும் மனவருத்தமுமான ஒரு சம்பவம் நேர்ந்தது; இத்தகைய நிலையில் என் ஆயுளில் ஒருபோதும் நான் சிக்குண்டதில்லை; இது மிக்க அயோக்கியதை—சகிக்கொணு அக்கிரமம்; மனிதனுக்கு அடக்க முடியாத ஆத்திரத்தையுண்டாக்கும் செய்கை; கட்டாயம் இதற்குச் சமாதானம் கேட்டறிந்தே திரவேண்டும்; இதை விடலாகாது" என்று மிக்க ஆத்திரத்தோடும் கோபத்தோடும் கூறினன்.

ஆனந்தஸிங் அவன் கூறியதைக் கேட்டபின் அவனைச் சாந்தப்படுத்தக்கூடிய விதமாய் "தயவுசெய்து கொஞ்சம் பொறுமையோடு நிதானமாய்ப் பேசும்; முதலில் இதைப் பற்றி ஆலோசிக்கத் தாங்கள் என்னிடம் வரவேண்டிய காரணம் என்னவென்பதைக் கூறுங்கள் பார்ப்போம்" என்ருன்.

அம்மனிதன் "அய்யா! இது போலீஸாருக்குச் சம்பந்தப்பட்ட விஷயமாய் எனக்குத் தோன்றவில்லை; ஆயினும் இதை யிவ்வளவில் விட்டுவிடக்கூடாதென்பதை, யாவும் அறிந்தால், நீரே யொப்புக் கொள்வீர்; சாதாரணமான துப்பறியும் ஆசாமிகளிடத்தில் எனக்கு நம்பிக்கையே கிடையாது; ஆயினும் உம்மைப்பற்றிக் கேள்விப்பட்ட வரையில் உம்மிடம்தான் இதைப்பற்றி ஆலோசிப்பது தகும் என்பது புலப்பட்டது" என்ருன்.

ஆனந்தஸிங்:—"சரி, சரி; இன்னெரு கேள்வி: நீர் அச்சம்பவம் நேர்ந்ததும் நேராய் ஏன் இங்கு வரவில்லை" என்ருன்.

அம்மனிதன் வியப்படைந்து "என்ன? என்ன நீர் கூறுவது?" என்ருன். ஆனந்தஸிங் தன் கடிகாரத்தைப்பார்த்து விட்டு "மணி இரண்டேகால் ஆகிறது; ஆனல் உமது உடைகள் இருக்கும் நிலைமையை நோக்கினல் நீர் காலையில்

விழித்தபோதே அச்சம்பவம் நேர்ந்திருக்க வேண்டுமென்பது நன்ருகத் தெரிகிறதே" என்ருன்.

அம்மனிதன் கலைந்திருக்கும் தன் சிகையைத் தொட்டுப்பார்த்து, தூசு படிந்த உடைகளையும் நோக்கியபின்,

"ஆம்; நீ கூறுவது உண்மையே; நான் என் உடைகளை யாவது முகத்தின் நிலைமையையாவது கவனிக்கவேயில்லை; அத்தகைய வீட்டைவிட்டு வெளிப்படுவதே எனக்குப் பிரதானமான வேலையாகத் தோன்றியது; ஆனுல் இங்கு வருமுன் பலவிடங்களுக்கு ஓடிச்சென்று ஆங்காங்கு விசாரித்துப் பார்த்தேன்; வீட்டுத் தாகாளிடங்களுக்கெல்லாம் சென்று விசாரித்துப் பார்த்தேன்; அவர்களனைவரும் கிருஷ்ணராஜு விசுவாச நிலயத்தின் வாடகை முழுமையும் கொடுத்துவிட்டதாகக் கூறினுர்கள்; மேலும் அங்கு யாவும் ஒழுங்காக விருப்பதாகவும் கூறினுர்கள்." என்ருன்.

ஆனந்தஸிங்:—"இரும், இரும்; தாங்களும் என் சினேகரைப்போல் ஒரு கதையைத் தலைகீழாக ஆரம்பிக்கிறீர்கள்; தங்கள் மனே நிலைமையைச் சரியாய் ஒரு ஒழுங்கு படுத்துங்கள்; படுத்திக் கொண்டு தாங்கள் இப்படி யலங்கோலமாய் வெளியில் அலைந்து செல்லும்படி நேரிட்ட சம்பவம் என்னவோ அதை அது நடந்தபடியே ஆரம்பமுதல் ஒழுங்காய்க் கூறுங்கள்" என்ருன்.

சுந்தரம்பிள்ளை மறுபடி தன் உடைகளைப் பார்த்துவிட்டு "இத்தகைய சம்பவம் என் காலத்தில் ஒரு போதும் நேர்ந்ததில்லை; நான் நடந்த சங்கதி முழுமையும் உம்மிடம் கூறியபின் நீரே என் கலவரத்திற்கும் ஆத்திரத்திற்கும் என்னை மன்னிக்க வேண்டியதற்குப் போதுமான காரணமிருக்கிறதென்று கூறுவீர்" என்று மேலும் சொல்லத் தொடங்கினுன்.

ஆனால் சுந்தரம்பிள்ளை அவ்வாறு கூறத் தொடங்கிய ஆரம்பத்திலேயே பேச்சு வெட்டுப்பட்டுவிட்டது. ஏனெனில் அச்சமயம் படிகளில் ஆட்கள்வரும் ஆரவாரமான சந்தடி கேட்டதும், வீட்டுக்காரியஸ்தி அறையின் கதவைத்திறந்து இரண்டு ஆடவர்களை யுள்ளே யனுப்பினாள். இருவரும் நல்ல பலாட்டியர்கள். அவர்கள் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள். அவரில் ஒருவன் பெயர் கங்காதரம்; மற்றவன் பெயர் பால கிருஷ்ணன். இன்ஸ்பெக்டர் கங்காதரம் ஆனந்தஸிங்குக்கு நன்றாகத்தெரிந்தவன். அவன் தன் கூட்டாளியாகிய இன்ஸ் பெக்டர் பால கிருஷ்ணம் பிள்ளையை ஆனந்தஸிங்குக்கு அறிமுகமாக்கி வைத்தான். பிறகு ஆனந்தஸிங்கை நோக்கி,

"நாங்கள் ஒரு ஆளைத் தேடிக்கொண்டு வந்தோம்; கடைசியில் உளவு இங்கு கொண்டுவந்தது" என்று கூறி விட்டுச் சுந்தரம்பிள்ளையை யுற்று நோக்கி, "லிங்கம் பாளை யம் புதுச்சாலைச் சுந்தரம்பிள்ளை நீர்தாமா?" என்றான்.

சுந்தரம்பிள்ளை:—ஆம் நான்தான்.

இன்ஸ்பெக்டர்:—காலையிலிருந்து உம்மைத் தேடிக்கொண் டிருக்கிறோம்.

ஆனந்தஸிங்:—எனக்கு வந்த தந்தியால் அவர் இங்கு வந் திருப்பாரென்று அறிந்து வந்தீர்களாக்கும்?

இன்ஸ்:—ஆம்; ஆனந்தஸிங்! சவுக்குத் தெருத் தபால் ஆபீஸிலிருந்து இவர் அனுப்பிய தந்திதான் எங் களுக்கு வழிகாட்டிற்று; அங்கிருந்து நேராக இங்கு வந்தோம்.

சுந்த:—ஆயினும் நீங்கள் என்னைத் தேடிவரவேண்டிய காரண மென்ன? என்னாலறிய வேண்டிய சங்கதி யுங் களுக்கென்ன விருக்கிறது? அப்படிப் போலீஸார் தலை யிடவேண்டிய விவகாரம் ஒன்றும்காணேமே. அப்படி யிருந்தால் நானே யுங்களிடம் கட்டாயம் வந்திருப்

பேனே; இவ்வாறே முன்னமே நமது ஆனந்தஸிங்கிடம் நான் கூறியிருக்கிறேனே.

இன்ஸ்:—எக்கூருக்கருகிலுள்ள விசுவாச நிலயம் என்ற வீட்டில் வசித்துக் கொண்டிருந்த கிருஷ்ணராஜு என்பவனுடைய மாணத்தைப்பற்றி உமக்குத் தெரிந்த சங்கதியை நான் எழுதிவாங்கவேண்டும்.

இன்ஸ்பெக்டர் கூறியதைக் கேட்டதே சுந்தரம்பிள்ளை மிக்க வியப்பும் பிரமையுமடைந்து திறந்தகண் திறந்தபடி பிரமையோடு இன்ஸ்பெக்டரை யுற்று நோக்கி, "என்ன! அவன் இறந்துபோனனு? மெய்யாகவா? என்ன ஆபத்தால்?" என்முன்.

இன்ஸ்:—ஆம்; இறந்துபோனன்; ஆனல் ஆபத்தல்ல; கொலை; கொடியகொலையே.

சுந்த:—அய்யோ கடவுளே! இதென்ன விபரீதம்! ஆயினும் நீர் என்மேல்....என்மேல்....ஐயங்கொள்ள வில்லையே?

இன்ஸ்:—இறந்தவன் ஜேபியில் ஒரு கடிதம் இருந்தகப்பட்டது; அது உம்மால் வரையப்பட்டது; அதில் கடந்த இரவு அவன் சகவாசத்தில் கழிக்க விரும்புவதாய் நீர் எழுதியிருக்கிறீர்.

இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன்:—"ஓ! நீர் அவ்வாறு எழுதினீரோ! சரிசரி" என்று கூறிவிட்டுத் தன் குறிப்புப் புத்தகத்தை யெடுத்துப் பார்த்தான்.

அப்போது ஆனந்தஸிங் கங்காதரம் இன்ஸ்பெக்டரை நோக்கி, "கங்காதரம்! கிருஷ்ணராஜுவைப்பற்றி நீ யுண்மையாக நடந்த சங்கதியை யுள்ளபடியே அறிய விரும்புகிருயல்லவா?" என்முன்.

இன்ஸ்:—"ஆம்; ஆயினும் சுந்தரம்பிள்ளை கூறப்போவது அவருக்கு விரோதமாக உபயோகப்படுத்தப்படும்

என்று முன்னடியே கூறிவிடுகிறேன்; அவர் உண்மையைக் கூறலாம்” என்ருன்.

ஆனந்:—“நமது நண்பர் நீங்கள் வருமுன் நடந்த சங்கதியையப்படியே யென்னிடம் கூறுவதற்கே யாரம்பித்தார்; அதற்குள் நீங்கள் வந்துவிட்டீர்கள்; அவர் என்னிடம் கூறத்தொடங்கிய சங்கதியை யிப்போதும் அப்படியே கூறச்செய்கிறேன்” என்று கூறிவிட்டுச் சுந்தரம் பிள்ளையை நோக்கி, “நண்பரே! இவர்கள் வருமுன் நீர் நடந்த சங்கதியை யென்னிடம் கூறுவதாய் வாக்களித்தீரல்லவா? இப்போது இடையில் இந்த ஆசாமிகள் வந்தார்கள் என்பதை யடியோடு மனத்தினின்றும் மறந்துவிட்டு, இவர்கள் இங்கு வராமலே யிருந்தால் எவ்வாறு உமது சங்கதியைக் கூறுவீரோ அவ்வாறே யிப்போது கூறும்” என்ருன்.

---

## 2-வது அத்தியாயம்.

சுந்தரம்பிள்ளை உடனே சற்றும் தடுமாற்றமின்றிப் பின் வருமாறு கூறினன்:—

“நான் பிரம்மச்சாரி; ஆகவே யாவரிடமும் சுலபமாகச் சிநேகம் செய்துகொள்வது என் சுபாவமாகிவிட்டது; இத்தகைய நண்பர்களில், குமாரன் சோலையென்ற விடத்திலுள்ள அழகு மாளிகையென்ற வீட்டில் வசிக்கும் மல்லையா என்பவர் ஒருவர்; சில வாரங்களுக்கு முன் அவர் வீட்டில்தான் நான் அந்தக் கிருஷ்ணராஜு என்பவனைச் சந்தித்தேன்; அவன் அன்று அங்கு போசனத்திற்கு வந்திருந்தான்; அவன் பாஞ்சால நாட்டானென்பது தெரிகிறது; அவன் சுத்த வாலிபன்; இங்கிருக்கும் பாஞ்சால நாட்டு மந்திரியோடு எவ்வாருே சம்பந்தப்பட்டவனென்

பதும் அறியலானேன்; அவன் நமது பாஷையை நன்ருய்ப் பேசுகிருன்; பார்வைக்கு மிக்க வசீகரமானவன்; என் ஆயு ளில் அத்தகைய வசீகரமுள்ள அழகுபுருஷனை நான் கண்ட தில்லை.

எவ்வாருே நானும் அந்த வாலிபனும் மிக்க சிநேக பாவ முடையவர்களாய் விட்டோம்; ஆரம்பத்திலிருந்தே என்ன காரணத்தாலோ அவன் என்னிடம் மிக்க விருப்ப முடையவனுகக் காணப்பட்டான்; நாங்கள் அறிமுகமான இரண்டு நாட்களுள் அவன் என்னைக்காண என்வீட்டிற்கு வந்தான். வரவர எப்படியோ இருவர்க்கும் மிக்க நேசமுண் டாகிவிட்டது. கடைசியில் அவன் தன் வீட்டில் வந்து இரண்டொரு நாட்கள் இருக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டான். அவ்வாறே அவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நேற்று மாலை நான் அவன் வீட்டிற்குச் சென்றேன்.

நான் அங்குச் செல்வதற்கு முன்பே அவன் தன் வீட்டு விவகாரங்களைப்பற்றி யென்னிடம் கூறியிருக்கிருன். அவ னிடம் நம்பிக்கையான ஒரு வேலைக்காரன் இருக்கிருன். அவன் அவர்கள் நாட்டானே. அவனே வீட்டுவிவகாரங் களை யெல்லாம் கவனிப்பவன்; அவனும் நமது பாஷை பேசு வான். அவனேடு மிக்க அபூர்வமான ஒரு சமையற்காரன் இருக்கிருனென்றும் அவன் மிக்க நேர்த்தியான கறி வகை களைச் செய்வானென்றும் கிருஷ்ணராஜு கூறினன். அவன் வீடு எக்கூருக்குத் தெற்கில் சுமார் இரண்டுமைல் தூரத்தி லிருக்கிறது. கூடியவரையில் விசாலமான வீடே அது. பாட்டைக்குச் சற்றுதூரத்தி லிருக்கிறது. பாட்டையி லிருந்து ஒரு வளைவான சிறு பாதை வீட்டுவரையில் செல் கிறது. அதன் இருபுறங்களிலும் அடர்ந்து வளர்ந்த குத் துச் செடிகளிருந்தன. அந்த வீடு மிக்க புராதனமானதும் இலமானதுமான கட்டிடம்.

வண்டி வீட்டினெதிரில் இருந்த புல்தரையில் சென்று நின்றதும் சொல்ப அறிமுகமுடையவனிடம் நாம் வந்தது புத்திசாலித்தனமா என்று சிந்தித்தேன். அவனே வந்து கதவைத் திறந்து மிக்க அன்போடு உபசரித்தான். உடனே ஒரு வேலைக்காரனை யழைத்து 'இவரை யழைத்துக் கொண்டு போய் அறையில் விடு' என்றான். வாடிய முகமுடைய அந்த வேலைக்காரன் என் உடுப்புப் பையைத் தூக்கிக் கொண்டு என்னை அழைத்துப்போய் எனக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருந்த ஒரு சயன அறையில் விட்டான். அந்த விடமோ மனச் சோர்வை யளிக்கத் தக்கது.

இருவரும் சம்பாஷித்துக்கொண்டே போசனம் செய்தோம். அவன் தன்னால் கூடிய வரையில் சந்தோஷத்தை யுண்டாக்க முயன்றாலும் அவன் சிந்தனை யலைந்துகொண்டே யிருப்பதாய்த் தெரிந்தது. அவன் மிரட்சி யடைந்தவன் போல் எனக்குச் சற்றும் விளங்காத விதமாய் வார்த்தை யாடினான். அடிக்கடி தன் விரல்களால் மேஜையின்மேல் தட்டிக்கொண்டும் நகங்களைக் கடித்துக்கொண்டுமிருந்தான். அவன் செய்கைகள் மன நிம்மதியில்லாதவன் செய்கைகளா யிருந்தன. ஆகாரமோ சரியாய் வட்டிக்கப்படவுமில்லை, பாகமும் நன்றாயில்லை. வட்டிக்கும் வேலையாளும் சோர்வடைந்த முகத்தோடிருந்ததால் சற்றும் சந்தோஷமே யுண்டாகவில்லை. நான் பன்முறை வீட்டிற்குத் திரும்பிவிட ஏதேனும் சாக்கு அகப்படுமாவென்று சிந்தித்தேன். உண்மையாகவே நாம் ஏன் இங்கு வந்தோம் என்று என் மனம் வருத்தமடைந்தது.

ஆ! இப்போது ஒருசங்கதி என் நினைவிற்கு வருகிறது: அதற்கும் நீங்கள் இப்போது விசாரிக்க வந்த சங்கதிக்கும் சம்பந்தமிருக்குமென்று நினைக்கிறேன். அப்போது நான் அதில் ஏதேனும் விசேஷமிருக்கும் என்று எண்ண

வில்லே. நாங்கள் போசனம் செய்து முடியும் சமயம் வேலேக்காரன் ஒரு கடிதம் கொண்டுவந்து அவனிடமளித் தான். கிருஷ்ணராஜு அதை வாசித்துப் பார்த்தபின் முன்னிலும் அதிக மனக்குழப்ப மடைந்தவனுய்க் காணப் பட்டான். பேசுவதை அடியோடு நிறுத்திவிட்டு ஓயாமல் சுருட்டுப் பிடித்துக்கொண்டே ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். அக்கடிதத்தைப்பற்றி ஒரு பிரஸ்தாபமும் செய்யவில்லே. சுமார் பதினேருமணிக்கு நான் படுக்கைக் குப் போய்விட்டேன். சற்றுநேரங்கழித்துக் கிருஷ்ண ராஜு என் அறைக்குவந்து எட்டிப்பார்த்தான். அறை யிருட்டாக விருந்தது. கிருஷ்ணராஜு 'மணியடித்தீர்களா?' என்று கேட்டான். நான் இல்லேயென்றேன். அவன் அந் நேரத்தில் வந்து என் நித்திரையைக் கெடுத்ததற்காகத் தன்னே மன்னிக்கும்படி கூறி 'மணி' ஒன்ருகிறது என்றியம் பிச்சென்ருன். அதன் பிறகு நான் ஆழ்ந்த நித்திரையடைந் தேன்.

இப்போது அங்கு நேர்ந்த ஆச்சரியமான சம்பவத் தைக் கூறுகிறேன். நான் விழித்துக்கொண்டபோது விடிந்து நேரமாய்விட்டது. கடியாரத்தை யெடுத்துப் பார்த்தபோது மணி ஒன்பதென்று தெரிந்தது. நான் எட்டு மணிவரையில் எழுந்திருக்காதிருந்தால் சரியாக எட்டு மணிக்கு என்னே எழுப்பி விடும்படி கூறியிருந்தேன். ஆகை யால் ஒருவரும் என்னே யெழுப்பாமலிருந்து விட்டது எனக்குமிக்க வியப்பாகவிருந்தது. நான் துரிதமாக எழுந்து மணியை யடித்தேன். எத்தனேமுறை யடித்தாலும் ஒரு வரும் பதில் அளிக்கவில்லே. அதன்மேல் மணியடிக்கும் கயிற்றில் ஏதோ பழுது நேர்ந்துவிட் டிருக்குமென்று எண் ணிச் சீக்கிரம் என் உடைகளே யணிந்துகொண்டு மிக்க ஆத்திரத்தோடு கீழே யிறங்கிச்சென்றேன். கூடத்தில் ஒரு

வரும் இல்லாதிருப்பதைக்கண்டதே யெனக்கு மிக்க ஆச்சரியமாய்விட்டது.

எனக்கு ஜலம் வேண்டியதாயிருந்தது. கூடத்தில் இருந்தபடி ஆளைக் கூப்பிட்டேன். பதில் இல்லை. ஆட்கள் நடமாடும் அரவமுமில்லை. வரவர என் வியப்பு அதிகரிக்கத் தொடங்கியது. பிறகு அறை அறையாய்ப் போய்ப் பார்த்தேன். அறைகளில் ஒருவரேனுமில்லை. எல்லாம் காலியாக விருந்தன. என் அடக்கொணு வியப்பு திகிலாய் மாறிவிட்டது. கிருஷ்ணராஜு தான் சயனித்துக்கொள்ளும் அறை யின்னதென்று எனக்குக் காட்டியிருந்தான். அங்கு ஓடிப் போய்ப் பார்த்தேன். அங்கும் ஒருவருமில்லை. படுக்கையில் இரவு ஒருவரும் படுக்கவே யில்லையென்பது தெரிந்தது. மற்றவர்களோடு கிருஷ்ணராஜுவும் போய்விட்டான் என்பது தெரிந்தது. எஜமான், வேலைக்காரன், சமையற்காரன் எல்லாரும் அன்னியநாட்டார்கள். இரவில் எப்படியோ மாயமாய்ப் போய்விட்டார்கள். இதுதான் நான் அங்குச்சென்றதன் முடிவு" என்று தன் கதையைக் கூறி முடித்தான்.

ஆனந்தஸிங் தன் காங்களைத் தேய்த்தபடியே யாவும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். கடைசியில் சுந்தரம் பிள்ளையை நோக்கி "எனக்குத் தெரிந்தவரையில் உமக்குநேர்ந்த இச்சம்பவம் மிக்க வியப்பானதே! இருக்கட்டும் அதன் பிறகு என்ன செய்தீர் கூறும் பார்ப்போம்" என்றான்.

சுந்தரம்பிள்ளை:—"எனக்கு அடங்காக்கோபம் வந்தது. முதலில் 'நம்மை மிக்க அகௌரவமாய்க் கேலிசெய்தார்கள்' என்று கருதினேன். நான் உடைகளை யெடுத்துப் பையில் போட்டுத் தூக்கிக்கொண்டு கதவை மூடிவிட்டு அங்கிருந்து நேராய் எக்கூருக்கு நடந்தேன். அங்கு வீட்டுத் தரகன் ஒருவன் இருக்கிறான். அங்கு

விசாரித்தபோது கிருஷ்ணராஜு இருந்த பிர தேசத்திலுள்ள வீடுகளெல்லாம் அவன் வசத்தில் தான் இருக்கின்றனவென்பது தெரிந்தது. அப்போது அவர்கள் கேவலம் நம்மைக் கேலி செய்வதற்காக இவ் வளவு காரியம் செய்திரார்களென்றும், அவர்களுடைய மூலக்கருத்து வீட்டு வாடகையைக் கொடாமல் மோசம் செய்வதாகவேயிருக்குமென்றும் புலப்பட் டது. மேலும் அப்போதுதான் கால்வருட வாடகை யைக் கட்டவேண்டியகாலம். நான் தாகனைக் கண்டு கேட்டபோது அவன் நான் எச்சரிக்கை செய்ததற் காக வந்தனமளிப்பதாகவும், ஆனல் அந்த வீட்டின் வாடகை முன்னமே முன்பணமாகவே அளிக்கப்பட்ட தென்றும் கூறினன்.

அதன் பிறகு நான் பாஞ்சால நாட்டு மந்திரியிடம் சென்று கிருஷ்ணராஜைப்பற்றி விசாரித்தேன். அங்குள் ளார் அவனைப்பற்றி யொன்றுமே தெரியாதென்று கூறிவிட் டார்கள். அதன் பிறகு மல்லையன் வீட்டில் தான் அவனை நான் முதல் முதல் கண்டபடியால் மல்லையனுக்கு அவனைப் பற்றிய விஷயம் தெரியலாகுமென்று கருதி அவன் வீட் டிற்குச் சென்றேன். அவனுக்கு எனக்குத்தெரிந்த அளவு கூடத் தெரியாதென்று அறியலானேன். கடைசியில் உன் னிடமிருந்து என் தந்திக்குப் பதில் வந்ததும், இத்தகைய விஷயங்களில் தக்க ஆலோனை கூறத் தகுதியுடைய ஆள் நீயேயென்று கருதி யுன்னிடம் வந்தேன்" என்று கூறி விட்டு இன்ஸ்பெக்டரை நோக்கி, "இன்ஸ்பெக்டர்! இப்போது தாங்கள் கூறியவற்றால் ஏதோ விபரீதம் நடந்திருப்பதாகத் தெரிகிறது. நான் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் கடவுளறியச் சத்தியமே. எனக்கு அவன் விஷயத்தைப்பற்றி யொன்றுமே தெரியாது. இவ்விஷயத்

தில் என்னால் கூடியவரையில் நீதிக்கு உதவிசெய்ய வேண்டு மென்பதே என் ஆவல்" என்றான்.

இன்ஸ்:—நான் அவ்வாறே நம்புகிறேன். நீர் கூறிய ஒவ்வொரு விஷயமும் எங்களுக்குத் தெரிந்திருக்கும் சமாசாரங்களுக்குப் பொருத்தமாக விருக்கின்றன. திருட்டாந்தமாகப் போஜனம் செய்யும்போது வந்த அக்கடிதம். அக்கடிதம் என்னவாயிற்றென்பதை நீர் கவனித்தீரா?

சுந்த:—ஆம்; பார்த்தேன். கிருஷ்ணராஜு அதைச் சுருட்டித் தீயில் எறிந்து விட்டான்.

இன்ஸ்பெக்டர் கங்காதரன், தன்கூட வந்த துப்பறியும் இன்ஸ்பெக்டராகிய பாலகிருஷ்ணனை நோக்கி, "ஓ பாலகிருஷ்ணம்! இதற்கென்ன கூறுகிறாய்?" என்றான்.

பாலகிருஷ்ணன் என்ற இன்ஸ்பெக்டர் நன்றாய்க் கொழுத்துத் தடித்தமனிதன். அவன் கண்கள் மட்டும் பிரகாசம் பொருந்தியவைகளாக இராவிட்டால் அவன் முகம் விகார சொரூபமாகவே யிருக்கும். அவன் புன்னகை புரிந்துகொண்டே தன் ஜேபியிலிருந்து கசக்கிச் சுருட்டப்பட்டிருந்த ஒரு கடிதத்தை யெடுத்து ஆனந்தஸிங்கை நோக்கி, "ஆனந்தஸிங்! அது ஒரு சிறிய தீக்குழி. அவன் வீசியெறிந்தபோது இக்கடிதம் தீக்குழியின் ஓரத்தில் விழுந்துவிட்டது. நான் அந்தக்குழியின் ஓரத்தில் இருந்து இதை எடுத்தேன்" என்றான்.

ஆனந்தஸிங் அவனை மெச்சிக்கொள்வதுபோல் புன்னகைபுரிந்து "நீ இச்சிறு கடிதத்தைக் கண்டுபிடித்துவிட்டதை நோக்க, அந்த வீடுமுழுமையும் நீ மிக்க உன்னிப்பாகவே ஆராய்ந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது" என்றான்.

பாலகிருஷ்ணன்:—"ஆம். அப்படிச் செய்வதுதான் என் வழக்கம். இதை வாசிக்கட்டுமா?" என்றான்.

ஆனந்தலிங் வாசியென்று தலையசைத்தான்.

பால:—இது சாதாரணமான நீர்க்கோடு முதலிய ஒரு குறியுமில்லாத கடிதம்; நாணயமானதே; கால்கடிதம் இருக்கிறது; சிறிய அலகுகளையுடைய கத்தரிக்கோலால் இரண்டு பாகங்களாகக் கத்தரிக்கப்பட்டிருக்கிறது; மூன்று மடிப்பாய் மடிக்கப்பட்டிருக்கிறது; மூன்று மடிப்பாய் மடிக்கப்பட்டுச் சிவப்பு அரக்கால் முத்திரையிடப்பட்டிருக்கிறது; ஏதோ முட்டை வடிவுடைய தட்டையான வஸ்து அவசரத்தோடு அரக்கின்மேல் முத்திரைக்குப் பதிலாக அழுத்தப்பட் டிருக்கிறது. 'ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணராஜுப்பிள்ளை-விசுவாச நிலயம்' என்று விலாசமிடப்பட்டிருக்கிறது; இதில் எழுதப்பட்டிருக்கும் சமாசாரம் என்னவெனில்,

"நமது சொந்த நிறங்கள் பச்சையும் வெள்ளையும்-பச்சைதிறக்கப்பட்டும் - வெள்ளை மூடப்பட்டும். முதல் அடுக்கு, முதல் தாழ்வாரம், வலதுபக்கம் ஏழாவது, பச்சைத்திரை - மிகத்துரிதமாய். த." என்பதே.

இது ஒரு ஸ்திரீயின் கையெழுத்து. கூரான பேனாவால் எழுதப்பட்டிருக்கிறது. மேல் விலாசம் மட்டும் வேறு பேனாவாலோ வேறொருவராலோ எழுதப்பட்டிருக்கிறது. அதில் எழுத்துக்கள் தடிப்பாய் இருக்கின்றன பார்.

யாவும் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்த ஆனந்தலிங் "ஆம். இதுமிக்க அதிசயமான கடிதமே. நீ இதைச் சோதிப்பதில் தகவல்களையெல்லாம் மிக்க நுட்பமாகக் கவனிப்பதைப்பற்றி உன் சாமார்த்தியத்தைப் புகழ்கிறேன். ஆனால் இவற்றோடு இன்னும் இரண்டொரு தகவல்களையும் சேர்க்கலாம். அரக்கின்மேல் போடப்பட்ட

முத்திரை தட்டையாய்க் கோழிமுட்டை வடிவாய் இருந்த தென்றாய். சட்டையின் கையில் இருக்கும் பொத்தானாகவே அது இருக்கவேண்டும். வேறெது அப்படியிருக்கிறது? கத்திரி நகங்களைக் கத்தரிக்கும் சிறு வளைவான கத்தரி. கடிதத்தின் ஒவ்வொரு வெட்டிலும் அச்சிறுவளைவைக் காணலாம்" என்றான்.

துப்பறியும் இன்ஸ்பெக்டர் வியப்போடு ஆனந்தஸிங்கை நோக்கி "நான் அதிலிருந்த சத்தெல்லாம் பிழிந்து விட்டேனென்று எண்ணினேன். ஆயினும் இன்னும் கொஞ்சம் பாக்கி யிருந்தது என்று தெரிகிறது. அக் கடிதத்தால் எதோ விவகாரம் நடந்துகொண் டிருந்ததென் றும், இந்த விஷயத்தில் ஒரு ஸ்திரீ யாவற்றிற்கும் அஸ்திவாரமாக இருக்கிறாளென்றும் மட்டுமே எனக்குப் புலப் பட்டதன்றி வேறொன்றும் தோன்றவில்லை" என்றான்.

சுந்தரம்பிள்ளை:—"இக்கடிதம் நான் கூறிய சங்கதிகளுக்குப் பொருத்தமாக விருந்தவரையில் இக்கடிதம் அகப்பட்டதைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். ஆயினும் அந்தக் கிருஷ்ணராஜனுக்கு என்ன சம்பவித்ததென் பதும், அவ்வீட்டிலிருந்தவர்கள் சங்கதி யென்னவாயிற்றென்பதும் எனக்கு இன்னும் கூறப்படவில்லை" என்றான்.

இன்ஸ்பெக்டர் கங்காதரம்:—கிருஷ்ணராஜின் சங்கதியைச் சுலபமாகவே கூறிவிடலாம். அவன் வீட்டிற்கப்பால் ஒருமைல் தூரத்திலிருக்கும் ஆவாரங்காட்டு மைதானத்தில் சவமாகக்கிடந்தான். எதுவோ ஒரு பலமான ஆயுதத்தால் அவன் மண்டைமேலடிக்கப்பட்டு மண்டை கூழாய் நசுங்கி விட்டிருந்தது. அந்த இடம் ஒரு மூலை. சமீபத்தில் நாற்புறங்களிலும் கால் மைல் வரையில் வீடே கிடையாது. அவன் முதலில் பின் பக்கமிருந்து

அடிக்கப்பட்டிருக்கிறான். விழுந்து மடிந்தபின்னும் பன்முறை மேலு மேலு மடிக்கப்பட்டிருக்கிறான் என்பது நன்ருகத் தெரிகிறது. இது மிக்க கோபத்தோடு செய்யப்பட்ட கொலை யென்பதிற் சந்தேகமேயில்லை. அந்தவிடத்தில் உளவுகாட்டக்கூடிய காலடிகள் முதலியன ஒன்றுமில்லை.

ஆனந்த:—களவு ஏதேனும் நடந்ததோ?

இன்ஸ்:—இல்லை. அத்தகைய முயற்சியே யில்லை.

சுந்த:—இது மிக்க கோரமான விஷயம். மனதிற்கு மிக்க வியாகூலத்தை யளிக்கத்தக்கது. மிக்க பயங்கரமானது. ஆயினும் இது எனக்கு ஆபத்தையுண்டாக்கத்தக்கதாக விருக்கிறதே. நான் அவன் வீட்டிற்கு விருந்தாளியாய்ச் சென்றேன். நான் இதில் - இக்குற்றத்தில் - எப்படிச் சம்பந்தப்பட்டிருக்கிறே னென்பது எனக்குச் சற்றும் விளங்கவில்லை. நான் அங்குச்சென்று போசனம் செய்து பிறகு சயனித்துக்கொண்டேன். அதன் பிறகு கிருஷ்ணராஜு என்னை யறியாமல் நடு இரவில் வெளியே சென்று இத்தகைய கோரமான மரணமடைந்ததற்கும் எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. நான் எப்படி யிதில் சம்பந்தப்பட்டிருப்பதாக நீங்கள் கருதினீர்களென்பது எனக்கு விளங்கவில்லை.

பால:—"தாங்கள் இதில் சம்பந்தப்பட் டிருக்கிறீர்களென்பது மிகச் சுலமாகத் தெரிகிறது. எப்படி யெனில், இறந்தவனிடமிருந்து அகப்பட்டது ஒரு கடிதமே. அதில் நீர் அதேயிரவு அவன் வீட்டிற்குவந்து அங்குத் தங்குவதாக எழுதியிருந்தீர். அக்கடித உறையின்மேலிருந்த விலாசத்தால்தான் அவன் பெயர் விலாசம் முதலியவை யெனக்குத் தெரிந்தன. இன்று காலை

ஒன்பது மணிக்குமேல் நாங்கள் அந்த வீட்டிற்குச் சென்று பார்த்தோம். அங்கு நீராவது வேறு யாராவது ஒருவருமில்லை. அதன்பிறகுதான் நகரத்தில் நீரெங்கிருந்தாலும் உம்மைத் தேடிப் பிடிக்கும்படி நண்பர் கங்காதரம் பிள்ளைக்குத் தந்தி கொடுத்துவிட்டு நான் அந்த வீட்டைச் சோதனை செய்யச் சென்றேன். அதன்பிறகு நகரத்திற்கு வந்து நண்பரை யழைத்துக்கொண்டு இங்கு வந்தேன்.

இன்ஸ்பெக்டர் கங்காதரம் பிள்ளை யெழுந்து "இப்போது நாம் இவ்விஷயத்தை உத்தியோக முறைப்படிக்குப் பேசுவோம். சுந்தரம்பிள்ளை! நீர் இப்போது எங்களோடு கூட ஸ்டேஷனுக்கு வந்து இதைப்பற்றி யுமக்குத் தெரிந்த விஷயத்தை எழுதி வைக்கவேண்டும்" என்றான்.

சுந்த:—"ஆகா; தடையின்றி வருகிறேன். ஆனந்தஸிங்! இந்த விஷயத்தில் குற்றவாளியை அல்லது இதன் உண்மையைக் கண்டுபிடிக்க நான் உன்னை யமர்த்திக் கொண்டிருக்கிறேன். இவ்விஷயத்தில் நீ தயவு செய்து கஷ்டத்திற்கு எவ்வளவாயினும் பால்மாறவேண்டாம். செலவு எவ்வளவு ஆனாலும் சரி. நான் அதற்குப் பின்னிடையேன்" என்றான்.

ஆனந்தஸிங் துப்பறியும் பாலகிருஷ்ணனை நோக்கி, "நான் உன்னோடு கலந்து இவ்விஷயத்தில் வேலைசெய்வதில் உனக்கு ஒரு ஆக்ஷேபனையுமிராதென்று நினைக்கிறேன்" என்றான்.

பால:—"அதற்கு மாறாக இதை நான் மிக்க கன்னியமாகவே கருதுகிறேன்" என்றான்.

ஆனந்த:—"நீ செய்த காரியங்களை யெல்லாம் சுறுசுறுப்பாகவும், வேலைக்காரத்தனமாகவும் செய்திருக்கிறாய் என்பது புலப்படுகிறது. ஆகையால் கிருஷ்ண

ராஜு கொல்லப்பட்ட சரியான வேளையெப்போது என்பதை யறியத்தக்க உளவு ஏதேனும் கண்டு பிடித்தாயா?" என்றான்.

பால:—அவன் ஒருமணிக்கு முன் அங்கிருந்திருக்கிறான். அச்சமயந்தான் மழைபெய்தது. உண்மையாகவே அவன் மழைக்கு முன்பே மாண மடைந்துவிட்டிருக்கிறான்.

சுந்த:—ஆனால் அது சுத்த அசம்பாவிதமான பேச்சு; கிருஷ்ணராஜு இரவு ஒரு மணிக்கு என் சயன அறைக்கு வந்து பேசியிருக்கிறான். அது அவன் குரலென்றே நான் சத்தியம் செய்வேன்.

அதைக்கேட்ட ஆனந்தஸிங் "இது மேல் பார்வைக்கு அசம்பாவிதமாகத் தோன்றுகிறது. ஆயினும் நடக்கக் கூடியதே" என்று நகைத்துக் கொண்டே கூறினான்.

அச்சமயம் கங்காதரம் ஆனந்தஸிங்கை நோக்கி "உனக்கு ஏதோ உளவு சிக்கியிருக்கிறது போல் தெரிகிறது" என்றான்.

ஆனந்த:—"இப்போது தோற்றப்படுகிறவரையில் இந்த விஷயம் அவ்வளவாய்ச் சிக்குடையதல்ல. ஆனால் இதில் சில அபூர்வமான சங்கதிகளும், யோசிக்கவேண்டிய விஷயங்களும் இருக்கின்றன வென்பது உண்மையே. இதைப்பற்றி முடிவாகத் திடமான அபிப்பிராயம் நான் கூற வேண்டு மாயின், அதற்கு முன் இதைப்பற்றி யின்னும் சில விஷயங்களை நானறிந்து கொள்ளவேண்டும். என் பாலகிருஷ்ணம்! இப்போது உன்னிடம் சிக்கிய இக்கடித மன்னியில் வேறு ஏதேனும் விசேஷ சங்கதி உன்னிடம் சிக்கியிருக்கின்றதோ?" என்றான்.

பாலகிருஷ்ணன் ஒருவிதமாக ஆனந்தஸிங்கை நோக்கி விட்டு "ஆம். மிகக் கவனிக்கத்தக்க சில விஷயங்கள் அகப்

பட்டிருக்கின்றன. நான் ஸ்டேஷனில் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடித்தபின், நீ வந்து அவற்றைப் பற்றி யுன் அபிப்பிராயத்தைக் கூற விரும்பினால் அப்படியே செய்யலாம்” என்றான்.

ஆனந்தஸிங் “ஆகா; எப்போதும் ஆயத்தமாயிருக்கிறேன்” என்று கூறிவிட்டுத் தன் காரியஸ்தியை யழைத்து “அம்மா! இந்த நண்பர்களை வெளியில் அழைத்துக்கொண்டு போய் விட்டு விட்டு, உடனே இந்தத் தந்தியைப் பையனிடம் கொடுத்தனுப்பு. இதற்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும். இந்தா ரூபாய்” என்றான்.

---

## 3-வது அத்தியாயம்.

போலீஸாரும் சுந்தரம்பிள்ளையும் சென்றபின் ஆனந்தஸிங் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கும் வழக்கம்போல் தலையைச் சாய்த்துக் கண்களை மூடிக்கொண்டு சற்று நேரம் அசைவற்றுப் பேசாமல் உட்கார்ந்திருந்தான். பிறகு சற்றுநேரம் சுருட்டுப் பிடித்துக்கொண்டே யிருந்தான். கடைசியில் தட்டென்று விசுவநாதன் பக்கம் திரும்பி, “விசுவநாதம்! இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்? உன் அபிப்பிராயம் என்ன?” என்றான்.

விசுவநாதன்:—இந்தச் சுந்தரம்பிள்ளையைப்பற்றிய மர்மம் இன்னதென்று எனக்குச் சற்றேனும் விளங்கவில்லை.

ஆனந்த:—அது கிடக்கட்டும். நடந்த குற்றத்தைப்பற்றி என்ன கருதுகிறாய்?

விசுவ:—அதுவா! அந்த வீட்டில் அவனோடுகூட இருந்தவர்களனைவரும் ஓடிவிட்டார்கள். ஆகையால் ஏதோ வழியில் அவர்களும் அக்கொலையில் சம்பந்தப்பட்டே இருக்கிறார்களென்றும் அதனாலேயே யோடிவிட்டார்களென்றும் கருதுகிறேன்.

ஆனந்த:—அதுவும் உண்மையில் அவ்வாறு நடந்திருக்குமென்று உத்தேசிக்கவேண்டிய விஷயமே. ஆனல் இன்னொருவிஷய மிருக்கிறது. அதாவது, அந்த ஆட்கள் இத்தனைநாட்கள்வரை இரவில் அவன் தனியாகவே இருக்கையில் அங்கேயே யிருந்திருக்கிறார்கள். அச்சமயங்களில் அவனைக் கொல்வதைவிட்டு, வீட்டில் ஒரு விருந்தாளி வந்திருக்கும் சமயம் பார்த்துத்தானா அத்தகையகாரியத்தைச் செய்வார்கள்?

விசுவ:—நீ கூறுவது மெய்யே. ஆயினும் அவர்கள் என் ஓடிவிடவேண்டும்? இது ஒரு பெரிய விஷயமல்லவா?

ஆனந்த:—ஆம்; என் ஓடிவிடவேண்டு மென்பது ஒரு பெரிய விஷயமே. நமது சுந்தரம் பிள்ளைக்கு நேர்ந்த சம்பவம் இருக்கிறதே அதுவும் ஒருபெரிய விஷயமே. இந்த இரண்டிற்கும் பொருத்தமான சங்கதியை யூகித்துக் கொள்வதெனின் அது மனிதனுடைய புத்தியில் சுலபமாக முடிகிற காரியமல்ல. ஆயினும் அக்கடிதம் வந்ததற்குப் பொருத்தமான ஒரு சங்கதி புத்திக்கு எட்டும் பட்சத்தில், அதையே நமது உத்தேசத்திற்கு அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு இதை ஆராய்ச்சி செய்யலாகும். இதில் புதிதாய் நமது ஆலோசனைக்குப் புலப்படும் விஷயங்கள் எல்லாம் நம் உத்தேசத்திற்குப் பொருந்துமாயின் படிப் படியாய் இதைக் கண்டுபிடித்து விடலாகும்.

விசுவ:—அஸ்திவாரமாக என்ன உத்தேசமிருக்கிறது?

ஆனந்த:—நண்பனே! சுந்தரம் பிள்ளையைக் கேலி செய்யவே அப்படி நடந்துகொண்டார்கள் என்பது ஒப்பத்தகாத விஷயம் என்று தள்ளத்தக்கதே. பின்னல் நேர்ந்த சம்பவங்களால் ஏதோ விசேஷகாரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன என்பது நன்றாய்த்

தெரிகிறது. நமது சுந்தரம்பிள்ளையை யங்குவரும்படி தட்டிக்கொடுத்தது எவ்விதமாகவோ அதில் சம்பந்தப் பட்டிருக்கிறது.

விசுவ:—ஆயினும் இதற்கு என்ன விதமான சம்பந்தமிருக் கும்.

ஆனந்த:—ஒவ்வொன்ருக ஆராய்வோம்: அப்பாஞ்சால நாட்டானுகிய கிருஷ்ணராஜுக்கும் இந்தச் சுந்தரம் பிள்ளைக்கும் உண்டான சினேகிதமே இயற்கைக்கு மாருனதாக விருக்கிறது. கிருஷ்ணராஜே வலியச் சுந்த ரம் பிள்ளையைச் சினேகப்படுத்தி யிருக்கிருன். அவன் சுந்தரம் பிள்ளையை முதல் முதல் கண்டு அறிமுகமான தினத்திற்கு மறுநாளே நகரத்தின் ஒரு கோடியி லுள்ள அவர் வீட்டிற்குச் சென்றிருக்கிருன். அது முதல் அவரைத் தன் வீட்டிற்கு வரும்படிச் செய்யு மட்டும் அடிக்கடி அவரை நெருங்கிக் கொண்டே யிருந்திருக்கிருன். இப்போது சுந்தரம்பிள்ளையால் அவனுக்கு ஏதோ ஒரு காரியம் ஆகவேண்டியிருந் தால்தான் அவன் அப்படிச் செய்யவேண்டும். அவ ரால் என்ன காரியம் இவனுக்கு ஆகவேண்டியது? இவன் அவரால் எதையடையக் கருதினுன்? சுந்த ரம்பிள்ளை வசீகரமான மனிதரும் மல்ல. விசேஷ மான அறிவுவிளக்கமுடையவருமல்ல. அறிவு விளக்க முடைய ஒருவனுக்குச் சம்பாஷணை முதலியவற்ருல் சந்தோஷத்தை யளிக்கக்கூடியவரல்ல. அப்படி யிருக் கையில், வேறு எத்தனை சரியான மனிதர்களெல்லா மிருக்க, இவரையே தன் காரியத்திற்குத் தகுதியானவ ரென்று தெரிந்தெடுப்பானேன்? சுந்தரம்பிள்ளையிடம் வேறேதேனும் விசேஷ குணங்களிருக்கின்றனவா? ஆம்; இருக்கின்றன வென்றே நான் கூறுகிறேன்.

என்ன வெனில் சுந்தரம்பிள்ளை நல்ல மரியாதையும் நாணயமுமுடைய மனிதர். நமது நாட்டானெவனும் அவர் கூறும் வார்த்தைகள் மேய்யே யென்று நம்பு வான். சுந்தரம்பிள்ளை கூறிய சங்கதிகளெல்லாம் மிக்க அபூர்வமானவைகளாயினும், அந்தப் போலீஸ் இன்ஸ் பெக்டர்கள் இருவரில் ஒருவனாவது அவர் கூறிய சங் கதிகளில் ஒன்றையேனும் ஆக்ஷேபிக்கத் துணிந்தார் களா பார்த்தாயா.

விசுவ:—சரிதான்; கிருஷ்ணராஜுக்கு அவன் எத்தகைய சாட்சி கூறுவதற்காகத் தேவை?

ஆனந்த:—பின்னால் சம்பவங்கள் இப்போது நேர்ந்திருக்கிற மாதிரியால் அவன் ஒரு சாட்சியும் கூறவேண்டிய அவ சியமில்லாமற் போய் விட்டது. ஆனால் இச்சம்பவம் வேறு விதமாக நடந்தேறி யிருந்தால் சுந்தரம்பிள்ளை யெவ்வளவோ முக்கியமான சாக்ஷியம் கூறவேண்டி நேர்ந்திருக்கும். எனக்கு இவ்விஷயம் அப்படித் தான் புலப்படுகிறது.

விசுவநாதன் சற்று சிந்தித்து "அப்படியாயின் கிருஷ் ணராஜு குறித்தகாலத்தில், ஒரு குறித்த இடத்தில் இல்லை யென்று சுந்தரம்பிள்ளை சாக்ஷி கூறியிருக்க நேர்ந்திருக் குமோ?" என்றான்.

ஆனந்த:—ஆ! அதே; அதே; சந்தேகமின்றி அப்படி ருசுப் படுத்தவே அவன் சுந்தரம் பிள்ளையை இரவு அங்குத் தங்கியிருக்கச் செய்தான். ஏதோ ஒரு காரியத்தைச் செய்வதில் கிருஷ்ணராஜு அவன் வேலைக்காரர் அனை வருமே உடந்தையாக இருந்தார்கள் என்று விவகாரத் திற்கு வைத்துக்கொள்வோம். அது எந்தக்காரியமோ அக்காரியம் இரவு ஒருமணிக்குள் செய்து முடிக்க ஏற் பாடாயிருக்கும். அவர்கள் கடியாரத்தைத் திருப்பி

வைத்துச் சுந்தரம்பிள்ளைக்கு நேரம் அதிகமானதாகக் காட்டிப் படுக்கைக்கு அனுப்பி விட்டிருக்கவேண்டும். அது எப்படியாயினும் கிருஷ்ணராஜு சுந்தரம் பிள்ளையை யெழுப்பி மணி ஒன்ருயிற்று என்று கூறிய போது உண்மையில் பனிரண்டாகியிராது என்பது மட்டும் நிச்சயம். அவன் உடனே சென்று தன் காரியம் கொலேயோ களவோ எதுவோ அதை முடித்துக்கொண்டு ஒருமணிக்குள் வீட்டிற்கு வந்து விட்டால், தான் இரவு ஒருமணி வரையில் வீட்டில் இருந்ததாகவும், பிறகும் இருந்ததாகவும் ருசுப்படுத்த இப்போது பலமான சாட்சியிருக்கிறதன்ருே? இப் போது, ஒருமணிக்கு முன் கிருஷ்ணராஜு கொல்லப் பட்டிருக்கவேண்டுமென்று இன்ஸ்பெக்டர் கூறிய போது சுந்தரம்பிள்ளை "அது அசம்பாவிதம், கிருஷ்ண ராஜு ஒருமணிக்கு என்னை யெழுப்பினுன்" என்று கூறினுரல்லவா. அவர் மணி யடிக்கவில்லை. கிருஷ்ண ராஜு, ஒரு மணிக்கு, தான் அங்கிருப்பதாய் அவர் பார்க்கவேண்டுமென்றே அந்நேரத்தில் போய் அவரை யெழுப்பி, அதற்குச் சாக்கு 'தாங்கள் மணி யடித்தது போலிருந்தது' என்று கூறியதோடு, அவர் கேட்கா திருக்கும்போதே 'மணி ஒன்ருயிற்று' என்றும் கூறி ஞன். அவன் காரியம் நிறைவேறியிருந்து இவர் சாட்சி கூறியிருந்தால் இவர் சாக்ஷியம் சந்தேகிக்கப் பட்டேயிருக்கும். ஏனெனில் குறுக்கு விசாரணையில் 'உம்மைக் கிருஷ்ணராஜு எழுப்பியபோது மணி ஒன் றென்று உமக்கு எப்படித்தெரியும்?' என்று கேட்டால் கிருஷ்ணராஜு கூறியதாகத் தான் கூறுவார். கிருஷ்ண ராஜு குற்றவாளியாக இருந்தால் அச்சாக்ஷியம் நம்பத் தகாததாய் விடும். கிருஷ்ணராஜு இதைக்

கவனித்திருக்கவில்லை. அதோடு விவகாரமே அவன் கோரியதற்கு மாறாக நடந்து விட்டது. அவனே கொல்லப்பட்டான்.

விசுவநாதம் யாவும் கேட்டபின் ஆனந்தஸிங்கின் புத்தி சாமார்த்தியத்திற்கு மிக்க வியப்படைந்து "ஆம், ஆம். இப்போதெனக்கு யாவும் விளங்கின. ஆனால் மற்ற பேரும் காணாமற் போனதெப்படி?" என்றான்.

ஆனந்தஸிங் "நான் இன்னும் எல்லாவிஷயங்களையும் யூகிக்கவில்லை. ஆயினும் அது முடியாத காரியமல்ல" என்றான்.

விசுவ:—"அவனுக்கு வந்த சமாசாரம்?" என்றான்.

ஆனந்த:—அதில் என்ன எழுதியிருக்கிறது? 'நமது வர்ணங்கள் நீலமும் வெள்ளையும்; நீலம்திறக்கப்பட்டும் வெள்ளை மூடப்பட்டு மிருக்கின்றன' என்பதே. இது குதிரைப் பந்தயத்தைப்பற்றிய சங்கதி யென்று தெரிகிறது. "முக்கியமாடி, முதல் அறை, வலப்பக்கம் ஏழாவது பச்சைத்திரை" என்பவை ஒரு சமிக்கையையும், சந்திக்கவேண்டிய இடத்தையும் குறிக்கின்றன. ஒரு இடத்தில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இச்சங்கதிகள் எல்லாவற்றிற்கும் அடியில் பொறாமையுடைய ஒருவன் கணவனாயிருக்கிறான். இது மிக்க அபாயகரமான விஷயம். அப்படி யில்லாவிட்டால் அவள் 'மிக்க துரிதம்' என்று வரைந்திருக்கமாட்டாள்; 'த' என்ற எழுத்திலும் ஒரு விசேஷமிருக்கிறது.

விசுவ:—கிருஷ்ணராஜு பாஞ்சால நாட்டாள். "த" என்பது "தங்கம்" என்ற பெயரின் முதல் எழுத்தென்று கருதுகிறேன். பாஞ்சாலநாட்டு மாதரில் அப்பெயர் சாதாரணம்.

ஆனந்த:—"பேஷ்! விசுவநாதம்! நீ கூறுவது சரிதான்;

ஆனால் பாஞ்சால நாட்டு ஒருமாது தன் நட்டானுக்குத் தங்கள் பாஷையில்தான் கடிதம் வரைவாள். இக்கடிதம் எழுதியவள் உண்மையில் நமது நாட்டாள். இந்த நேர்த்தியான இன்ஸ்பெக்டர் திரும்பி நம்மிடம் வருமட்டும் நாம் பேசாமலிருப்போம். இதற்கிடையில் நமக்குக் கொஞ்சநேரம் சுறுசுறுப்பான வேலை கிடைத்ததற்காக நமது நல்லதிஷ்டத்தை வாழ்த்துவோம்." என்று கூறினான்.

இன்ஸ்பெக்டர் வருவதற்குள், ஆனந்தஸிங் அனுப்பிய தந்திக்குப் பதில் வந்தது. ஆனந்தஸிங் அதை வாசித்துப் பார்த்துவிட்டுத் தன் கைப்புத்தகத்தில் வைத்துக்கொள்ளப் போனான். ஆனால் அச்சமயம் விசுவநாதன் தன்னை யாவலோடு நோக்குவதைக் கண்டதும் அக்கடிதத்தை யவனிடமளித்தான். அந்தத் தந்தியில் ஏழெட்டு பெயர்கள் இருந்தன. விசுவநாதன் அதை வாசித்துப் பார்ப்பதற்குள் ஆனந்தஸிங் "நாம் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்களோடு சம்பந்தப்படுகிறோம்" என்றான்.

விசுவநாதன் அத்தந்தியில் இருந்த பெயர்களை யெல் வாசித்தானதும் ஆனந்தஸிங், "கூடிய வரையில் நமது இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் முன்னமே ஏதோ ஒரு வழியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறான்" என்றான்.

விசுவ:—"நீ கூறுவது எனக்கு விளங்கவில்லை" என்றான்.

ஆனந்த:—நல்லது; கிருஷ்ணராஜனுக்கு வந்த கடிதம் ஒரு இடத்தில் சந்திக்கவேண்டும் என்ற ஏற்பாட்டையே குறிக்கிறதென்று நாம் முன்னமே தீர்மானித்தோம். நாம் உத்தேசித்தது சரியாயின் அவர்கள் சந்திக்கக் குறிக்கப்பட்ட இடத்திற்குச் செல்ல வேண்டிய ஒருவன், முதல் அடுக்கு மாடிக்குச் செல்லும் படிகளில்

ஏறவேண்டும். பிறகு ஒரு தாழ்வாரத்தில் ஏழாவது அறையைக் கண்டுபிடிக்கவேண்டும். அப்படியாயின் அவ்வீடு ஒரு பிரம்மாண்டமான வீடென்று நன்ருகப் புலப்படுகிறது. அதோடு அவ்வீடு ஆவாரங்காட்டு மைதானத்திற்குச் சமீபத்திலேயே யிருக்கவேண்டு மென்று தெரிகிறது. எப்படி யெனில் கிருஷ்ணராஜு அங்குச் சென்று மறுபடி இரவு ஒரு மணிக்குள் தன் வாசஸ்தலத்திற்குத் திரும்பிவந்துவிடக் கருதியிருக் கிருனென்பது நடந்த விஷயங்களால் தெரிகிறது. ஒருமணிக்குள் வந்துவிட்டால்தான் அவன் சுந்தரம் பிள்ளையைக்கொண்டு அச்சமயம் தான் அந்தவிடத்தி லில்லை யென்றும், தன் வீட்டி லிருந்ததாகவும் ருசுப் படுத்த முடியும். ஆவாரங்காட்டு மைதானத்திற்குச் சமீபத்திலிருக்கும் வீடுகள் கொஞ்சமேயாதலால் அங்கு வசிப்பவர்களுடைய பெயர்களைத் தெரிவிக்கும் படி அப்பிரதேசத்திலுள்ள வீட்டுத் தாகருக்கு ஒரு தந்தியனுப்பினேன். அவன் அனுப்பிய பதில்தான் இது.

கடைசியில் ஆனந்தஸிங் எதிர்பார்த்தபடி துப்பறியும் இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணம் பிள்ளை அங்கு வந்தான். உடனே மூவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள். ஆனந்த ஸிங்கும் விசுவநாதனும் தங்களுக்கு இரவுக்கு வேண்டிய வற்றைக் கையில் எடுத்துக்கொண்டு சென்ருர்கள். இவர்கள் நேராகக் கிருஷ்ணராஜு வசித்த விசுவாச நிலயம் என்ற விடுதிருக்கும் எக்கூருக்குச்சென்று அங்கு ஒரு ஹோட்ட லில் தங்கினுர்கள். அங்கு சுகமான இடம் அவர்களுக்குக் கிடைத்தது.

மாலைப்போது மிக்க இருளாக விருந்தது; குளிர் காற்று மும்முரமாய் வீசிக்கொண்டிருந்தது. மூவரும்

ஹோட்டலிலிருந்து புறப்பட்டு விசுவாச நிலயத்திற்குச் சென்றார்கள்.

---

## 4-வது அத்தியாயம்.

அந்தக் குளிர்காற்றில் இருட்டில் சுமார் இரண்டு மைல் தூரம் நடந்தபின், ஆனந்தஸிங் முதலியவர்கள் இராஜபாட்டையிலிருந்து நெருங்கிய மாங்களடர்ந்த ஒரு பாதையில் திரும்பி அவ்வீட்டை நோக்கிச் சென்றார்கள். அவ்வீட்டின் முன் பக்கம் வாயிற்படிக்கு இடதுபக்கத்தில் இருந்த ஒரு சாளரத்தில் கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது.

இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் கட்டளைப்படி ஒரு போலீஸ்காரன் இங்குக் காவல் நின்றான். பாலகிருஷ்ணன் "நான் சாளரத்தில் தட்டுகிறேன்" என்று கூறி அவ்வாறே சென்று சாளரத்தைத் தட்டினான். ஆனந்தஸிங் எட்டிப் பார்த்து, உள்ளே யிருந்த அறையில் நெகிடித்தீயருகிலுட்கார்ந்திருந்த ஒரு மனிதன் தட்டென்றெழுந்ததைக் கண்டான். அவன்தான் மேற்கூறிய போலீஸ்காரன்; அவன் வெளுத்த முகமுடையவன்; அவன் சற்று நேரத்திற்குள் பெருமூச்சு விட்டுக்கொண்டே வந்து கதவைத்திறந்தான்.

அவன் நிலைமையைக்கண்ட இன்ஸ்பெக்டர் "வரதா! என்ன சங்கதி?" என்று ஆவலோடு கேட்டான்.

போலீஸ்காரன் தன் முகத்தைத் துடைத்துக்கொண்டு "அய்யா! நீங்கள் வந்ததால் நான் மிக்க நிம்மதியடைகிறேன். அப்பா! என் நரம்புகள் உறுதியாக இச்சமயத்திலில்லை யென்று கருதுகிறேன்" என்றான்.

இன்ஸ்பெக்டர்:—"என்ன வரதா? உன்நரம்புகளா? உனக்கு

நரம்புகள் இருக்கின்றனவென்று நான் நினைக்கவில்லையே" என்றான்.

வரதன்:—"இந்தக் காலி வீட்டில் நான் இந்நேரம் தனியாக விருந்ததும், அந்தச் சமையலறையில் இருந்து தோன்றிய அபூர்வ விஷயமும் என்னைக் கலங்கச் செய்து விட்டன; தாங்கள் சாளரத்தில் தட்டவே அதுவேதான் மறுபடி வந்ததாக்கும் என்று நான் நடுங்கி விட்டேன்" என்றான்.

இன்ஸ்:—மறுபடி எதுவந்ததென்று நடுங்கி விட்டாய்?

வர:—எனக்குத் தெரிந்தவரையில் பிசாசேதான்; அது இச்சாளரத்தில்தான் வந்து நின்றது.

இன்ஸ்:—"சாளரத்தில் என்ன வந்தது? எப்போது வந்தது? விவரமாகக்கூறு" என்றான்.

வர:—அய்யா! சுமார் இரண்டுமணி நேரத்திற்குமுன் அச்சமயம் தீபம் ஒடுங்கும் தறுவாயிலிருந்தது. நான் நாற்காலியில் உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருந்தேன். என்ன காரணத்தாலோ நிமிர்ந்து சாளரத்தை நோக்கினேன். சாளரத்தின் வெளியிலிருந்து ஒரு முகம் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது. அய்யோ கடவுளே! எப்படிப்பட்ட உருவம்! அது எங்கே மறுபடி என் கனவில் வருமோ என்று நினைக்கும்போதே என் நெஞ்சம் நடுங்குகிறது.

இன்ஸ்:—சேசே! இது ஒரு போலீஸ்காரன் பேசுகிற பேச்சல்ல.

வர:—"ஆம் அய்யா! அது என்னமோ எனக்குத் தெரியும். ஆனால் அவ்வுருவம் என்னை நடுங்கச்செய்து விட்டது. நான் அதை மறைத்துக் கூறுவதில் என்ன பயன்? அய்யா! அது கறுப்பாகவும் இல்லை, வெள்ளையாகவு

மில்லை; நான் பார்த்த எந்த நிறமாகவுமில்லை. அது ஒரு அபூர்வமான நிறமாக விருந்தது. அய்யோ! அதன் உருவம்! பருமன்! கடவுளே! அய்யா! அது உமது முகத்திற்கு இரண்டத்தனை பருமனுக்கு அதிகமாக விருந்தது. அது கோழி முட்டையைப் போன்ற கண்களை யுருட்டி யென்னை நோக்கிற்று. அதனுடைய பல் வரிசைகளோ பயங்கரமான காட்டு மிருகத்தின் பற்கள் போலிருந்தன. அய்யா! நான் உண்மையைக் கூறுகிறேன். அவ்வுருவம் அந்த விடத்தை விட்டொழிகிற வரை என்னால் விரலையசைக்கவாவது, நகரவாவது, மூச்சு விடவாவது முடியவில்லை; அது சென்றபின் நான் போய் வெளியில் பார்த்தேன்; தெய்வாதீனமாய் ஒருவரும் காணப்படவில்லை" என்றான்.

இன்ஸ்பெக்டர் மிக்க வெறுப்படைந்து "வரதா! நீ நல்ல மனிதனென்று தெரிந்திரா விட்டால் அது பிசாசாக விருந்தாலும் கைக்ககப்படாததற்கு ஒரு போலீஸ்காரன் இம்மாதிரி கூறுவதற்கு உனக்கு உடனே தண்டனையளிப்பேன். இப்போது நீ கூறிய யாவும் வெறும் தோற்றமல்லவென்றே நினைக்கிறேன்" என்றான்.

ஆனந்த:—"அந்தச் சங்கதியைச் சுலபமா யறிந்துகொள்ளலாம்" என்று கூறிவிட்டுத் தன்னிடமிருக்கும் இராந்தலை யெடுத்துக் கொண்டு வெளியில் சென்று சற்றுநேரம் சோதனை செய்துவிட்டுத் திரும்பிவந்து "பன்னிரண்டாவது நம்பர்ப் பாதரட்சை; அந்த அளவிற்குத் தக்கபடி அம்மனிதனுடைய அவயவங்களு மிருக்குமாயின் அவன் பிரம்மாண்டமான இராக்ஷதனாகவே யிருக்கவேண்டும்" என்றான்.

இன்ஸ்:—அவன் என்னவானான்?

ஆனந்த:—அவன் அங்குள்ள செடிகளில் நுழைந்து பாட்டையை நோக்கிச் சென்றான் என்பது தெரிகிறது.

இன்ஸ்பெக்டர் சிரிய முகத்தோடு "சரி; அவன் யாராகவிருந்தாலும், எதற்காக வந்திருந்தாலும் சரி; தற்சமயம் அவன் போய்விட்டான்; இப்போது நான் உடனே கவனிக்கவேண்டிய விஷயங்களிருக்கின்றன; ஆனந்தஸிங்! என்னுடன் வருகிறாயா? இந்த வீடு முழுமையும் காட்டுகிறேன்" என்றான்.

இவர்கள் உடனே அந்த வீட்டிலுள்ள உட்காரும் அறைகளையும், படுக்கையறைகளையும் கவனித்து நோக்கினார்கள். அவற்றில் ஒன்றும் அகப்படவில்லை. அவற்றில் குடியிருந்தவர்கள் விசேஷ சாமான்களொன்றும் கொண்டு வரவில்லையென்பது விளங்கியது. அங்கிருந்த சிறு சாமான்கள் முதற்கொண்டு எல்லாம் வீட்டைச் சேர்ந்தவை. அவர்கள் ஏராளமான துணிகளைமட்டும் விட்டுவிட்டுப் போனார்களென்பது தெரிந்தது. அவற்றின்மேல் "மார்க்கன் கம்பெனி, மேட்டுவீதி" என்று முத்திரை போடப்பட்டிருந்தது. முன்னமே அவைகளைப்பற்றித் தந்தியின் மூலமாகக் கேட்டபோது அவர்கள் அவற்றை வாங்கியவர்கள் சரியாகப்பணம் கொடுத்து விட்டார்கள் என்பதைத் தவிர அவர்களைப்பற்றி வேறொன்றும் தெரியாதென்று கூறிவிட்டார்கள். சில சுங்கான்கள், கதைப்புத்தகங்கள், பழையகாலத்துக் கைத்துப்பாக்கி, ஒரு பிடில் முதலிய சில்லறைச் சாமான்களும் அங்குக் கிடந்தன; விசேஷமானது ஒன்றேனும் அகப்படவில்லை.

இன்ஸ்பெக்டர் "இவற்றிலெல்லாம் ஒன்றுமில்லை" யென்று கூறிவிட்டுக் கையில் ஒரு மெழுகுவர்த்தியை யெடுத்துக்கொண்டு அறையறையாய்ப் பார்க்கத்தொடங்கி "ஆனந்தஸிங்! இப்போது சமையலறையை உனக்குக் காட்டுகிறேன்" என்று அவனை அழைத்துச் சென்றான்.

சமையலறை வீட்டின் பின்பக்கம் இருக்கிறது; அது ஒரு இருண்ட உயரமான விடம்; அதின் ஒரு மூலையில் வைக்கோல் பரப்பிய ஒரு மஞ்சம் இருந்தது; அது சமையல் காரன் படுத்துக்கொள்ள உபயோகமாவது. அங்கிருந்த மேஜைமேல் ஆகாரங்களில் பாதி புசிக்கப்பட்டுப் பாதி மிஞ்சியிருந்த ஆகாரத்தட்டுக்களும், மாசடைந்த தட்டுக் களும், இரவு புசித்த ஆகாரத்தின் மீதியு மிருந்தன.

இன்ஸ்பெக்டர் தீபத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு ஒரு பக்கம் காட்டி "இதோ இந்த அதிசயவஸ்து என்ன வென்று பார்" என்று ஆனந்தஸிங்கிடம் கூறினன். அங் கிருந்த மேஜையின் பின்னல் ஒரு வஸ்து இருந்தது. சட் டென்று பார்ப்போர்க்கு அது இன்னதென்று சீக்கிரம் புலப்படாது. அது திரைந்து வாடி வதங்கிச் சுருங்கிப் போயிருக்கும் மிகக் குட்டையான ஒரு மனித உருவம்போல் காணப்பட்டது. இன்ஸ்பெக்டர் முதலில் அதை நன்றாய்ப் பார்த்து, "அது பதனிட்ட ஒரு நீக்ரோ ஜாதிக்குழந்தை" யென்று கருதினன்; பின்னும் உற்று நோக்கியபோது உலர்ந்துபோன புராதன வானரம் என்று கருதினன்; முடி வில், 'அது மிருகமா மனிதனு?' என்று அவனுக்குச் சந்தே கமாய் விட்டது. அதன்மேல் இரண்டு சரங்களாகக் கோக் கப்பட்ட கிளிஞ்சில் மாலை போடப்பட் டிருந்தது.

ஆனந்த:—"மிக்க அபூர்வமானது! மிக்க அபூர்வமானதே! வேறேதேனு முண்டோ?" என்றான்.

இன்ஸ்பெக்டர் பேசாமல், கழிந்த பண்டங்களை யெறி யும் தொட்டியண்டை ஆனந்தஸிங்கை யழைத்துச் சென்று அத்தொட்டியை அவனுக்குக் காட்டினன். அதில் ஒருபெரிய வெள்ளைப்பட்சி முரட்டுத்தனமாகப் பிய்த்தெறியப்பட்டிருந்தது. அதன் சிரமும், தேகமும், மற்ற அவயவங்களும் அங்குக் கிடந்தன; அதன் இறகு

கள் பிடுங்கப்படாமலே யிருந்தன. ஆனந்தலிங் அதன் தலையிலிருந்த கொண்டையை இன்ஸ்பெக்டருக்குக் காட்டி "இது ஒரு வெள்ளைச் சேவல்; மிக்க அபூர்வமானதே இந்த விஷயம்" என்றான்.

இன்ஸ்பெக்டர் அதன்பிறகு, அத்தொட்டியின் பின்னால் தண்ணீர் மொள்ளும் ஒரு சிறு பாத்திரத்திலிருந்த இரத்தத்தை ஆனந்தலிங்குக்குக் காட்டினான். பிறகு மேஜையின் கீழ் ஒரு கூடையில் கொளுத்தப்பட்ட எலும்புகள் இருந்ததைக் காட்டினான். பிறகு ஆனந்தலிங்கை நோக்கி "ஏதுவோ ஒன்று கொல்லப்பட்டும், கொளுத்தப்பட்டுமிருக்கிறது; காலையில் ஒரு டாக்டரை வரவழைத்து அவருக்கிவற்றைக் காட்டினோம்; இந்த எலும்புகளையெல்லாம் தீக்குழியிலிருந்து பொறுக்கி எடுத்தோம்; டாக்டர் இவை மனிதர் எலும்பல்லவென்றார்" என்றான்.

ஆனந்தலிங் வழக்கம்போல் தன் கரங்களைத் தேய்த்துக்கொண்டே நகைத்து "இன்ஸ்பெக்டர்! புத்தி சாதுர்யத்தைக் காட்டும் இத்தகைய விவகாரம் உனக்குக் கிடைத்ததற்காக நான் சந்தோஷங் கொண்டாடுகிறேன்; உனக்கு இருக்கும் சந்தர்ப்பங்களுக்கு உன் சாமார்த்தியம் அதிகமேயென்று கருதுகிறேன்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டபோது இன்ஸ்பெக்டரின் கண்களில் சந்தோஷத்தால் பிரகாசம் உண்டாயிற்று. அவன் பெருமையோடு ஆனந்தலிங்கை நோக்கி "ஆனந்தலிங்! நீ கூறுவது உண்மையே; மாகாணங்களில் சாமார்த்தியத்தைக்காட்டும் குற்றங்கள் அகப்படுவதில்லை; இத்தகைய விஷயம் அகப்பட்டால் நல்ல சந்தர்ப்பம் வாய்க்கிறது; இதை நான் விடமாட்டேன் என்று நினைக்கிறேன்; இந்த எலும்புகளைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன?" என்றான்.

ஆனந்த:—ஒரு ஆடா யிருக்கும்.
இன்ஸ்:—அந்த வெள்ளைச்சேவல்?
ஆனந்த:—“இது மிக்க அபூர்வமான விஷயமே - இணை யற்றது என்றே நான் கூறுவேன்” என்றான்.
இன்ஸ்:—“ஆம்; இந்த வீட்டில் அதிசயமான வழக்கங்களை யுடைய அபூர்வமான ஆட்கள் வசித்து வந்ததாகத் தெரிகிறது; அவர்களில் ஒருவன் மடிந்தான்; மற்ற ஆட்கள் தாம் அவனைத் தொடர்ந்து சென்றுகொன்றார் களா? அப்படி நடந்திருந்தால் அவர்கள் எப்படியும் பிடிக்கப்படுவார்கள்; ஏனெனில் ஒவ்வொரு துறை முகத்திலும் காவல் வைக்கப்பட் டிருக்கிறது; ஆனால் என் அபிப்பிராயம் வேறு - ஆம் வேறான அபிப் பிராயமே” என்றான்.
ஆனந்த:—“ஆயின் உனக்கு ஒரு உத்தேசம் ஏற்பட் டிருக்கிறது?” என்றான்.
இன்ஸ்:—“ஆம்; அதை நானே பார்த்து விடுவேன்; என் நன்மைக்கு அப்படித்தான் நான் செய்யவேண்டும்; ஆனந்தஸிங்! நீ முன்னமே புகழ்ச்சி தேடிக்கொண் டாய்; நான் இனிமேல் தேடிக்கொள்ளவேண்டும்; ஆகையால் இதிலாவது நான் உதவியில்லாமலே யிதைக் கண்டு பிடித்தேன் என்று பெயரொடுக்க விரும் புகிறேன்” என்றான்.

ஆனந்தஸிங் கலகலவென்று நகைத்து “நல்லது; இன்ஸ் பெக்டர்! அப்படியே நீ யுன் வழியிற்செல்; நான் என் வழி யிற் செல்கிறேன்; எப்போதும் நான் உனக்கு உதவிசெய்ய ஆயத்தமாகவேயிருப்பேன்; உனக்கு அப்படிப் பிரிய மிருந் தால் நீ அவ்வாறே செய்யலாம்; இப்போது இங்கு நான் காணவேண்டியது கண்டாய் விட்டது; வேறிடத்தில் எனக்கு வேலையிருக்கிறது; வந்தனம்; நான் போய் வரு

கிறேன்" என்று கூறிவிட்டு விசுவநாதனுடன் புறப்பட்டான்.

உடனே ஆனந்தஸிங்கும், விசுவநாதனும் அங்கிருந்து புறப்பட்டபோது விசுவநாதனுடைய மனதில் சந்தோஷமும், வியப்பும் பொங்கின. ஏனெனில் மற்ற யாவரையும் விட விசுவநாதனுக்கு ஆனந்தஸிங்கின் குறிகளெல்லாம் நன்ருகத் தெரியும். அவற்ருல் ஆனந்தஸிங்கின் மனதில் உள்ள விஷயம் இன்னதென்று அவன் ஊகித்துக்கொண்டான். அதாவது:—ஆனந்தஸிங் ஏதோ சூக்ஷுமமான உளவைக் கண்டுபிடித்திருக்கிருன்; இப்போது சுடச்சுட அதைப் பின்பற்றி இந்த விஷயத்தைக் கண்டுபிடிக்கப் போகிருன் என்பதே.

ஆனந்தஸிங் வெளிப்பார்வைக்கு ஒன்றுமறியாதவன் போலிருந்தாலும், அவன் மனம் மிகச் சுறுசுறுப்பாய் வேலை செய்துகொண் டிருக்கிறதென்றும், அவன் ஆத்திரத்தோடு எந்த விஷயத்திலோ பிரவேசிக்க மனத்துடிப்போடிருக்கிருனென்றும் விசுவநாதன் அறிந்து கொண்டான். ஆனந்தஸிங் வழக்கம்போல் ஒன்றும் கூறவில்லை. விசுவநாதனும் தன் வழக்கப்படி ஒன்றும் கேட்கவில்லை. "சுறுசுறுப்பாய் வேலைசெய்துகொண் டிருக்கும் அவன் மனதிற்கு நாம் குறுக்கே செல்லலாகா" தென்று விசுவநாதன் பேசாமலிருப்பது வழக்கம். மேலும் எல்லாச் சங்கதிகளும் நாளடைவில் தன்னிடம் வெளியிடப்படும் என்று அவன் அறிவான்.

விசுவநாதன் மேற்கண்ட காரணங்களால், "ஆனந்தஸிங்கை யொன்றும் கேட்காமலே அவன் செய்கைகளைக் கவனித்துக்கொண்டே யிருந்தால், எல்லாச் சங்கதிகளும் தானே வெளிவரும்" என்று நம்பிக்கைகொண்டு பேசாமலிருந்தான். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் அவன் உத்தேசத்திற்கு மாருகச் சில நாட்கள் வரையில் ஒரு சங்கதியும்

வெளிவரவில்லே. ஆனந்தஸிங் அடிக்கடி எங்கோ வெளியில் சென்று வருகிறுன் என்பது மட்டும் விசுவநாதனுக்குப் புலப்பட்டதேயன்றி வேறு விவரம் ஒன்றும் தெரியவில்லே. பிறகு அவன் சமீபகாலத்தில் யாரோ கிராமவாசிகளிடம் அறிமுகம் செய்துகொண் டிருக்கிறுனென்றும், அடிக்கடி யத்தகைய ஆசாமிகளேச் சந்தித்து அவர்களிடம் சம்பாஷிக் கிறுனென்றும் விசுவநாதன் அறியலானுன். அவற்ருேடு ஒரு நாள் ஆனந்தஸிங் நகரத்திலுள்ள அதிசயமான பொருட் காட்சிச்சாலேக்குச் சென்று நெடுநேரம் அங்கு என்னமோ ஆராய்ச்சி செய்தானென்பதும் தெரியவந்தது.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் ஆனந்தஸிங் விசுவ நாதனே நோக்கி, "நண்பனே! ஒருவாரம் கிராமவாசம் செய் வதால் உனக்கு மிக்க குதூகலம் உண்டாகுமென்று நான் கருதுகிறேன்; பசுமையாய்த் தளிர்த்துக் கொழுந்து விட் டிருக்கும் செடிகொடிகளேக் காண்பது மனதிற்கு இரம்மி யத்தை யளிக்கும்" என்ருன்.

அவ்வாறே இருவரும் அன்றே, தாவரசாத்திரத்தை யும், புதிதாய்க் கண்டுபிடிக்கும் செடிகளேப் பதம்செய்து கொண்டுவரும் ஒருபெட்டியையும், தங்கள் மாற்றுடைப் பெட்டிகளேயும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

## 5-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங்கும், விசுவநாதனும் சென்று ஆவாரங் காட்டு மைதானத்தினருகிலிருக்கும் ஒரு கிரா மத்திலேயே தங்கினுர்கள். தினந்தோறும் ஆனந்தஸிங் வெளியில் சென்று தாவரங்களேப்பற்றிய ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான். அவன் கூடவேயிருக்கும் விசுவநாத னுக்கு மட்டும் இது வெளி நடனமே யென்பதும், ஆனந்த

ஸிங் உள்ளத்தில் ஏதோ விவகாரத்தை வைத்துக் கொண்டு அதைப்பற்றியே வேலை செய்துகொண் டிருக்கிறு னென்பது நன்ருகப் புலப்பட்டன. ஆயினும் வழக்கம் போல் அவன் ஒன்றும் கேட்க வில்லை.

இவர்கள் வெளியில் சென்ற காலங்களில் இரண்டு மூன்று வேளைகளில் இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணனைச் சந்தித்தார்கள். அச்சமயங்களிலெல்லாம் அவன் தன் காரியத்தில் தான் திருப்திகரமான வழியிற் சென்றுகொண் டிருப்பவன் போன்றே சந்தோஷமான முகத்தோடு சம்பாஷித்தான். ஆனல் இந்தக் கொலையைப்பற்றி ஏதேனும் கண்டு பிடித்ததாகக் காட்டிக் கொள்ளவேயில்லை.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள், காலையில் வந்த தினசரிப்பத்திரிகையை விசுவநாதன் பிரித்துப் பார்த்தபோது, அதில் சில சங்கதிகள் வெளியிடப் பட்டிருப்பதைக் கண்டு மிக்க வியப்படைந்து, அவ்விஷயத்தின் தலைப்பிலிருந்ததைக் கீழ்க்கண்டபடி வாசித்தான்:—

"ஆவாரங்காட்டு மைதானத்தில் நடந்த மர்மக் கொலை. கொலையாளி யென்றுச் சந்தேகிக்கப்பட்ட ஆள் சிறை செய்யப்பட்டான்."

இதைக்கேட்டதே ஆனந்தஸிங் திடுக்கிட்டுத் துள்ளி யெழுந்து, மிக்க ஆத்திரத்தோடு "என்ன விசுவநாதம்! பாலகிருஷ்ணன் குற்றவாளியைப் பிடித்துவிட்டா னென்ரு கூறுகிருய்" என்ருன்.

விசுவநாதன்:—"அப்படித்தான் தெரிகிறது. இதில் வெளியிட்டிருப்பதை அப்படியே வாசித்துக்காட்டுகிறேன். நீயே அறிந்து கொள்" என்று கீழ்க்காணுமாறு வாசித்தான்:

"ஆவாரங்காட்டு மைதானத்தில் நடந்த கொடூரமான கொலை சம்பந்தமாக ஒரு ஆள் சிறைசெய்யப்பட்டான்

என்ற சங்கதியைக் கேட்டதே எக்கூரில் எங்கும் பெருங் கிளர்ச்சி யுண்டாயிற்று; எக்கூரிலிருக்கும் 'விசுவாச நிலையம்' என்ற வீட்டில் வசித்துக் கொண்டிருந்த கிருஷ்ண ராஜூ என்ற வாலிபன் கொல்லப்பட்டது யாவருமறிந்த விஷயமே; அவன் மண்டையில் பலமாய் அடித்துக் கொல்லப்பட்டிருந்தான்; அவனிட மிருந்த வேலையாட்கள் ஓடி விட்டிருந்த படியால் அவர்கள் அக் கொலையில் சம்பந்தப் பட்டிருந்தார்கள் என்று ஊகிக்கவேண்டியிருந்தது; கொல்லப்பட்டவனிடம் சொத்திருக்க வேண்டு மென்றும், அதற்காகவே அவன் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் ஊகம் செய்யப்பட்டது; ஆனால் அதற்குத் தக்க ருசு காணப்படவில்லை;

இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணப் பிள்ளை இக்குற்றத்தைக் கண்டுபிடிக்க நியமிக்கப்பட்டார்; அவர் உடனே ஓடி விட்டவர்களைப் பிடிக்கச் சரியான முயற்சி யெடுத்துக் கொண்டார்; அவருடைய புத்தி சாமார்த்தியமான ஆராய்ச்சியில் அவர்கள் நாட்டைவிட் டோடிவிடவில்லை யென்றும், இங்கே எங்கோ மறைவான விடத்தில் பதுங்கிக்கொண்டிருக்கிறார்களென்றும் அவர் அறிந்து கொண்டார்; மடிந்தவனுடைய சமையற்காரன் ஒரு அபூர்வமான விகாரமுள்ளதும், பயங்கரமுள்ளதுமான முகமுடையவன்; அவன் சில கிராம வாசிகளால் ஒரு வீட்டின் சாளரத்தில் காணப்பட்டான்; அவன் கொலை நடந்தபின், அப்பிரதேசத்தில் சிலர் கண்களில் காணப்பட்டதோடு, ஒருநாள் துணிகரமாய் அவர்கள் வசித்துக்கொண்டிருந்த வீட்டிற்கே எதற்காகவோ சென்று அங்கு இன்ஸ்பெக்டரால் காவல் வைக்கப்பட்டிருந்த போலீஸ்காரன் கண்ணிற்பட்டு அவனால் பிடிபட மயிரிழை தப்பினான்.

மிக்க புத்தி சூக்குமமுடைய இன்ஸ்பெக்டர், அவன்

ஏதோ காரியார்த்தமாகவே அங்கு வந்திருப்பானென்றும், அப்படிப்பட்டவன் மறுபடியும் சமயம் பார்த்து வருவான் என்றும் யூகித்து, வெளிக்கு அவ்வீட்டிலிருந்த காவலை யெடுத்து விட்டதுபோல் காட்டி மிகத் தந்திரமாய் வீட்டோரத்திலிருந்த செடிகளில் தமது ஆட்களைக் காவல் வைத்தார்; சமையற்காரன் அவ்வலையில் வந்து சிக்கிக் கொண்டான்; அதாவது மறுபடி யொரு இரவு அங்குவந்த போது அவர்களால் பிடிக்கப்பட்டான்; ஆனால் அவன் இலேசாய்ப் பிடிபடாமல் தன்னைப்பிடித்த ஆளை முரட்டுத்தனமாய்க் கடித்துவிட்டான்; பெருத்த சம்பவங்கள் நடைபெறுமென்று எதிர் பார்க்கப்படுகின்றன."

விசுவநாதன் இதை வாசித்து முடிந்ததும், ஆனந்தஸிங் சட்டென்றெழுந்து "நாம் பாலகிருஷ்ணனை யுடனே பார்க்கவேண்டும்; ஆம்; அவன் வெளியில் புறப்படுமுன் அவனைப் பிடித்துக்கொள்ள வேண்டும்" என்றான். இருவரும் உடனே புறப்பட்டுத் துரிதமாய் நடந்தார்கள். ஆனந்தஸிங் கூறியபடி இவர்கள் அவன் இறங்கியிருக்குமிடத்திற்குச் சென்றபோது அவன் வெளியில் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

இவர்களைக் கண்டதே அந்த இன்ஸ்பெக்டர் "ஆ! பத்திரிகையைப் பார்த்தீர்களா?" என்று கூறிக்கொண்டே தன்னிடமிருந்த ஒரு பத்திரிகையை இவர்களிடம் நீட்டினான்.

ஆனந்தஸிங் "ஆகா! பத்திரிகையிலிருந்த சங்கதியைக் கண்டேன்; அது இருக்கட்டும்; நான் உனக்குச் சிநேக வாஞ்சையோடு ஒரு எச்சரிக்கை செய்வதற்காக என்மேல் நீ கோபிக்கவேண்டாம்" என்றான்.

இன்ஸ்:—"என்ன ஆனந்தஸிங்! எச்சரிக்கையா?" என்றான்.

ஆனந்:—"நான் இந்த விஷயத்தைக் கொஞ்சம் சாக்கிரதை யாகவே கவனித்தேன்; நீ சரியான வழியில் செல்வ தாய் எனக்குப் புலப்படவில்லை; எள்ளளவு சந்தேகமு மின்றி அங்கை நெல்லி போல் உண்மையென்று தெரிந்தாலன்றி இதே வழியில் அதிகமாய்ப் பிரவே சித்து விடாதே; இதுதான் உனக்குக் கூறும் எச்ச ரிக்கை" என்றான்.

இன்ஸ்:—நீ மிக்க அன்புகாட்டுகிறாய்.

ஆனந்த:—உண்மையில் உன் நன்மையைக் கோரியே நான் இதைக் கூறவந்தேன்.

இன்ஸ்பெக்டர் மெதுவாகத் தன் கண்களைச் சிமிட்டிக் கொண்டான். இதை விசுவநாதன் மட்டும் கவனித்தான். இன்ஸ்பெக்டர் ஆனந்தஸிங்கை நோக்கி, "நாம் இருவரும் அவரவர் வழியில் அவரவர் வேலைசெய்வது உசிதமென்று பேசிக்கொண்டோம்; அதன்படி என் வழியில் நான் செல் கிறேன்" என்றான்.

ஆனந்த:—அது சரிதான்; பின்னால் என்மேல் குறை கூறாதே.

இன்ஸ்:—"இல்லை யில்லை; நீ என் நன்மைக்கே கூறுகிறாய் என்று நம்புகிறேன்; ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வழி யிருக்கிறது; உன் வழி யுனக்குச்சிறந்தது; என் வழி யெனக்குச் சிறந்தது" என்றான்.

ஆனந்த:—"சரி; இதைப்பற்றிய பேச்சை யித்துடன் நிறுத்துவோம்" என்றான்.

இன்ஸ்:—"அந்தப்பயல் சுத்தக் காட்டுமனிதன் போன்ற வன்; தாமன் கையைக் குதிரைபோல் மென்று விட் டான்; நமது பாஷை யொருவார்த்தைகூட அவனுக் குத் தெரியவில்லை; அவனிடமிருந்து ஒரு சங்கதியே னும் தெரிந்துகொள்ள முடியவில்லை" என்றான்.

ஆனந்த:—"அவன் தன் எஜமானைக் கொன்றான் என்பதற்கு உன்னிடம் ருசு இருக்கிறதா?" என்றான்.

இன்ஸ்:—"நான் இருக்கிறதென்று கூறவில்லை; நம் எல்லாருக்கும் ஒவ்வொரு வழியிருக்கிறது; உன் வழியே நீ முயற்சிசெய்; என் வழியே நான் முயற்சிசெய்கிறேன்; நாம் முதலிலேயே இவ்வாறுதானே ஒப்பந்தம் செய்துகொண்டோம்" என்றான்.

ஆனந்தஸிங் "ஆம் ஆம்; நான் போய்வருகிறேன்" என்றதும், விசுவநாதனுடன் அங்கிருந்து தாங்கள் தங்கியிருக்கும் இடத்திற்குப் புறப்பட்டுப்போனான். அவ்வாறு போகும்போது வழியில் ஆனந்தஸிங் தன் நண்பனை நோக்கி "இந்தப்பயலின் சங்கதி யெனக்கு விளங்கவில்லை; இவன் நடக்கை பெரும் பள்ளத்தை நோக்கியோடும் குதிரைபோலிருக்கிறது; இருக்கட்டும்; இவன் கூறியபடி இவன் வழியில் இவன் செல்லட்டும்; நம் வழியில் நாம் செல்வோம்; ஆயினும் இவனிடம் நான் அறிந்துகொள்ளக் கூடாத ஒரு விஷயம் இருக்கிறது" என்றான்.

பின்னர் இருவரும் தங்கள் அறைக்குட் சென்றதே ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி "இதோ இந்த நாற்காலியில் உட்கார்; இந்த விஷயத்தில் இப்போதிருக்கிற நிலைமையை யுனக்கறிவிக்கவேண்டும்; இன்றிரவு உன் உதவி எனக்கு வேண்டியிருக்கும்" என்றதே, விசுவநாதன் மிகச் சந்தோஷமடைந்து நாற்காலியி லுட்கார்ந்து கவனமாகக் கேட்கத் தொடங்கினான். இதுகாறும் ஆனந்தஸிங் சும்மா இல்லை யென்றும், சுறுசுறுப்பாய் வேலை செய்துகொண்டுதானிருக்கிறானென்றும், ஆனால் அவன் வழக்கப்படி சமயம் வரும் வரையிலும் ஒருவரிடமும் சங்கதிகளை வெளியிடமாட்டானென்றும் விசுவநாதன் நன்கறிவான். ஆகையால் இப்போது புத்திசாதுரியமான விஷயங்கள் வெளிவரு

மென்று சந்தோஷ மடைந்தான். ஆனந்தஸிங் விஷயத்தைக் கூறத்தொடங்கி,

"என் ஆராய்ச்சிக்குப் புலப்பட்டவரையில் இந்த விஷயம் எவ்வாறு நிகழ்ந்ததென்பதைப்பற்றி அறிவிக்கிறேன்; நடந்த சம்பவங்களென்னமோ மிகச் சாதாரணமானவைகளாகவே புலப்பட்டாலும் குற்றவாளியென்று ஒருவரைச் சிறைசெய்வதில் மிக்க கஷ்டங்கள் இருக்கின்றன; இடையிடையில் விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டியவையிருக்கின்றன.

கொலை நடந்த இரவு கிருஷ்ணராஜுக்கு ஒரு கடிதம் வந்ததல்லவா? அதிலிருந்து கவனிப்போம்: கிருஷ்ணராஜின் வேலையாட்கள் இதில் சம்பந்தப்பட்டார்கள் என்ற யோசனையை யடியோடு விட்டு விடுவோம்; அதற்கு ருசு என்னவெனில் சுந்தரம் பிள்ளையை யங்கு வந்து தங்கச் செய்ய முயற்சி யெடுத்துக் கொண்டது கிருஷ்ணராஜே யன்றி வேலையாட்களல்ல; அவன் அப்படிச் செய்ததற்குக் காரணம் அன்றிரவு தான் வேறொரு இடத்தில் இல்லையென்றும், வீட்டிலிருந்ததாகவும் ருசுப்படுத்துவதற்கே. ஆகையால் கிருஷ்ணராஜே ஏதோ ஒரு விவகாரத்தை நடத்த உத்தேசித்திருந்தவன்; அது குற்றமுள்ள விவகாரம் என்றே தெரிகிறது; குற்றத்தைச் செய்பவன்றான் அத்தகைய சாட்சி வேண்டுமென்று கோருவான்; அந்த விவகாரத்தில் அவனே மடிந்தான். இப்போது அவனை யார் கொன்றிருக்க வேண்டும்? அவன் யாருக்கு விரோதமாக விவகாரம் நடத்த விருந்தானோ அந்த ஆள்தான் கொன்றிருக்க வேண்டும்; இதில் ஐயமில்லை; இது வரையில் நமது உத்தேசம் சரியானதே.

இப்போது வேலைக்காரர் ஓடி விட்டதற்கு என்ன காரணம் என்று பார்ப்போம்: கிருஷ்ணராஜு நடத்த உத்

தேசித்த விவகாரத்தில் இவர்களும் உடந்தையானவர்களே. விவகாரம் அவன் கோரியபடி நிறைவேறியிருந்தால், அவன் மேல் சந்தேகம் உண்டாகாதிருக்கத் தகுதியான ருசு ஆயத்தமாக இருக்கிறது. அதாவது நமது சுந்தரம் பிள்ளை அவன் வீட்டிலேயே யிருந்தான் என்று சத்தியம் செய் வார். அப்போது எல்லாம் ஒழுங்காகவே நடந்து விட்டிருக் கும். ஆனால் அந்த விவகாரமோ அபாயகரமானது. கிருஷ்ணராஜு குறித்த காலத்திற்குள் திரும்பி வாராவிட் டால் அவன் கொல்லப்பட்டான் என்று கருத வேண்டியதே. அதை யுத்தேசித்து முன் யோசனையாக ஏற்பாடு செய்யப் பட்டது. அதாவது, முன்னாடி இவர்கள் ஒளிந்து கொள்ள ஒரு இடம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. கிருஷ்ண ராஜு குறித்த வேளைக்குள் திரும்பி வரா விட்டால் வேலைக் காரர்கள் போய் அங்கு ஒளிந்துகொள்ள வேண்டியது. அப்படி மறைந்திருந்தால் பின்னால் கிருஷ்ணராஜைக் கொன் றவர்கள் மேல் அவர்கள் வஞ்சம் தீர்த்துக் கொள்ளலாகும். இதுதான் ஏற்பாடு. இப்போது அவர்கள் மறைந்து கொண்டதற்குக் காரணம் தெரிகிறதல்லவா?'' என்றான்.

விசுவநாதனுக்கு இது காறும் மறைவாக விருந்த விஷ யங்களெல்லாம் இப்போது பளிச்சென்று புத்தியிற் புலப் பட்டன. "அடடா! இது வரையில் இது நமது புத்தியிற் படவில்லையே'' யென்று அவன் வியப்படைந்தான். யாவும் கேட்டபின், "சரிதான்; ஒரு வேலைக்காரன் மறுபடி அந்த வீட்டிற்கு ஏன் திரும்பி வந்தான்?'' என்றான்.

ஆனந்தஸிங் "அவர்கள் கலவரத்தோடு அந்த வீட்டை விட்டு ஓடியபோது அவ் வேலைக்காரன் தான் இழந்து விட விரும்பாத ஏதேனும் ஒரு பொருளை அச்சமயம் கூடவே யெடுத்துச் செல்ல முடியாமல் விட்டுவிட்டுப் போயிருப் பான்; பிறகு வீடு காலியாயிருக்கிறதென்று கருதி அதை

யெடுத்துப் போக வந்திருப்பான்; ஏன் இது சரியான நியாயமாக உனக்குத் தோன்ற வில்லையோ?" என்றான்.

விசுவ:—"சரி; நீ இது காறும் கூறியயாவும் சரியாகவே புலப்படுகின்றன; அப்புறம் என்ன?" என்றான்.

ஆனந்த:—அப்புறம் கவனிக்கவேண்டியது அக்கடிதத்தில் குறித்த விஷயம். மறு முனையில் ஒரு உளவு ஆள் இருப்பதாக அக்கடிதத்தால் நன்கு விளங்குகிறது. இப்போது அந்த மறுமுனை யெங்கே யிருக்கிறதென்பதே கேள்வி; அது ஒரு பெரிய வீட்டிலிருக்கிறதென்று நான் முன்னமே கூறியிருக்கிறேன். அந்தப் பிரதேசத்தில் பெரிய வீடுகள் கொஞ்சமே.

நான் இக்கிராமத்தில்வந்து முதலில் தாவரவர்க்க ஆராய்ச்சி செய்யபவன்போல் வேலை செய்துகொண்டிருந்தேன். இடையில் வீதிகளின் வழியாகச் செல்லும்போது அந்த வீடுகளை யொவ்வொன்றுகக் கவனிக்கத் தொடங்கினேன். அது மட்டுமல்ல; அவற்றில் வசிப்பவர்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்தேன். அவற்றில் ஒரு வீடுமட்டுமே என் மனதைக்கவர்ந்தது. அதாவது, அபூர்வ சம்பவங்கள் அங்குதான் நடக்கக் கூடும் என்று என்புத்திக்கு புலப்பட்டது; அந்த வீடு பிரசித்திபெற்ற மேட்டு மாளிகை யென்பது; அது ஆவாரங்காட்டு மைதானத்திற்கு ஒரு மைலுக்கப்பாலும், கொலை நடந்த விடத்திற்கு அரை மைலுக்குக் குறைந்த தூரத்திலும் இருக்கிறது. அங்கிருக்கும் மற்ற மாளிகைகளில் மரியாதையும் கௌரவமும் பொருந்திய குடும்பங்களே வசிக்கின்றன. ஆனால் நான் கவனித்ததாய்க் கூறிய மேட்டு மாளிகை யென்றவீட்டில் வசிக்கும் அண்ணுசாமிப்பிள்ளை என்பவன் ஒரு அபூர்வமான மனிதனே. அவனுக்கு அபூர்வ சம்பவங்கள் நேருவது இயற்கையேயென்று

யாவரும் கருதக் கூடியவன். ஆகையால் அக்குடும்பத்தின் மேல் நான் என் கவனத்தைச் செலுத்தினேன்.

விசுவநாதம்! அந்த வீட்டிலிருப்பவர்கள் ஒரு அதிசயமான மனிதர்களே. அவர்களில் அண்ணுசாமிப்பிள்ளை, எல்லாரிலும் மிக்க அபூர்வமானவன். நான் ஒரு சாக்காக அவனைக் காணச் சென்றேன். அவனுடைய ஆழ்ந்த பார்வையாலும் கீழ் நோக்கான கபடப் பார்வையாலும் அவன், நான் உண்மையில் என்ன காரணமாக வந்தேனென்பதை யுணர்ந்து கொண்டானென்று தெரிந்து கொண்டேன். அவனுக்கு வயது ஐம்பதிருக்கும். ஆனல் அவன் பலமும் சுறுசுறுப்பு முடையவன்; அச்சமற்ற பார்வையும், தைரியமான மனமும் உடையவன். அவன் பெரும்பாலும் அன்னிய நாட்டானக விருக்கவேண்டும், அல்லது நெடுங்காலம் உஷ்ணப்பிரதேசமாகிய அன்னிய நாட்டில் வசித்தவனுக விருக்கவேண்டும்.

அவனுடை சினேகனும், காரியதரிசியுமாக ஒருவனிருக்கிறான். அவன் பெயர் உலகப்பன். அவன் சந்தேகமின்றி அன்னிய நாட்டான்; மிக்க கபடமும், வஞ்சமும், தந்திரமும் பொருந்தியவன்; வெளிக்கு இனிப்பும், உள்ளே நஞ்சும் உடைய பேச்சுக்காரன். பார்த்தாயா விசுவநாதம்! இப்போது நாம் இரண்டு கட்சி அன்னிய நாட்டாரையும் காண்கிறோம். அக்கட்சியில் ஒரு கட்சி விசுவாச நிலையத்திலும், இன்னெரு கட்சி மேட்டுமாளிகையிலும் இருக்கின்றன; விஷயம் தெரிகிறதா? இப்போது இவை யிரண்டும் எப்படி ஒன்று சேர்கிறதென்பதைக் கவனிப்போம்:

அண்ணுசாமிப் பிள்ளையும், அவனுடைய நெருங்கிய நண்பனும் காரியஸ்தனுமாகிய உலகப்பனுமே அக்குடும்பத்தின் பிரதான ஆட்கள். ஆயினும் அங்கு இன்னெரு ஆள் உண்டு. நமது நெருங்கிய விவகாரங்களை நோக்க

அந்த ஆள் நமக்கு மிக்க பிரதானம். அண்ணுசாமிப் பிள்ளைக்கு இரண்டு புத்திரிகள் இருக்கிருர்கள். அவர்களுள் மூத்தவளுக்குப் பதின்மூன்று வயது; இளையவளுக்குப் பதினென்று. அவர்களுக்குச் செவிலித்தாயாக விருப்பவள் பெரிய நாயகி யென்பவள். அவள் நமது நாட்டாள்; அவளுக்கு வயது சுமார் நாற்பதிருக்கும்; இன்னும் மணமாகாதவள். இவர்களையன்றி நம்பிக்கையான வேலைக்காரனெருவனிருக்கிருன். இவர்களே அக்குடும்பத்தின் பிரதானமான ஆட்கள். வெளியில் எங்கு யாத்திரை செய்தாலும் இவர்களனைவரும் கூட்டமாகவே செல்வார்கள். அண்ணுசாமிப் பிள்ளை யாத்திரையில் மிக்க பிரியமுடையவன். அவன் ஒரு வருடம் வெளியில் சென்றிருந்தான். திரும்பி வீடுவந்து சேர்ந்து இரண்டொரு வாரங்கள் தாம் ஆயின. அவன் திரண்ட செல்வவந்தன்; தான் விரும்பிய போகங்களை யாலசியமின்றி யுடனே யனுபவித்தல் அவனுக்கு எளிதில் முடியும். மற்றப்படி யவன் வீட்டில் ஏராளமான சமையற்காரர்கள், வேலையாட்கள், காவலர் முதலியவர்கள் ஒருபெருங் கூட்டமா யிருக்கிருர்கள். உண்மையில் அத்தனை பேருக்கு அங்கு வேலையில்லை; அதிக தீனியும் குறைந்த வேலையுமே. பெரிய செல்வவந்தர் வீடுகளில் அவ்வாறு இருப்பது சகஜம்.

இச் சமாசாரங்களை யெல்லாம் நான் பல வழிகளில் கிரகித்தேன். கிராமவாசிகளிடம் தந்திரமாய்க் கலந்து பேசியே அனேக விஷயங்களை யறிந்து கொண்டேன். சில விஷயங்களை நானே நேராய்க் கவனித்தறிந்து கொண்டேன். இத்தகைய குடும்பங்களைப் பற்றிய சங்கதிகளை யறிவதற்கு அக்குடும்பங்களில் வேலையாட்களாக விருந்து நீக்கப்பட்ட ஆட்களிருக்கிருர்களே அவர்களைவிடச் சரியான ஆட்கள் கிடைக்கமாட்டார்கள். எனக்கு அத்தகைய ஆள் ஒருவன் அதிஷ்ட வசத்தால் சிக்கினுன். அப்படி அதிஷ்டவசத்தால்

சிக்கினுனெனினும் நான் அத்தகைய ஆள் அகப்படுவானு வென்று தேடியதனுற்றுன் அகப்பட்டான். நான் அவன் மூலமாக நமக்கு அவசியமான சங்கதிகளை யறிந்து கொண் டேன்.

இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் கூறியபடி அவரவர் களுக்கு ஒவ்வொரு மார்க்கமிருக்கிறது. நான் இம்மாதிரி யாட்களைக் கண்டுபிடித்து அவர்கள் மூலமாக உளவறிவதால் மிக்க சாமார்த்தியமான குற்றவாளிகளைக்கூடக் கண்டு பிடித் திருக்கிறேன். அதே மாதிரி மேட்டு மாளிகையில் தோட் டக்காரனுக விருந்து தன் எஜமானுடைய முன் கோபத்தால் வேலையினின்றும் தள்ளப்பட்ட வரதன் என்பவனைக் கண்டு பிடித்தேன். இத்தகைய ஆட்களுக்குத் தங்கள் எஜமானர் மேல் எப்போதும் வெறுப்பும் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஆவலும் இருந்தே தீரும் என்பது அனு பவம். இத்தகையோர்க்கு அவ்வீட்டிலிருக்கும் வேலையாட் களில் ஒருவர் இருவரிடமேனும் நட்பிருக்கும். இவர்கள் மூலமாக அவ்வீட்டிலுள்ள மர்மங்களை யறிந்துகொள்ள லாகும். இந்த வழியாகவே மேட்டு மாளிகையின் விஷ யங்களை நான் அறிந்து கொண்டேன்" என்றுன்.

---

## 6-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங் பிறகு அவ்வீட்டைப்பற்றி யின்னும் விவரிக்கத் தொடங்கி,

"விசுவநாதா! அவ்வீட்டிலிருப்பவர்கள் அபூர்வமான வர்கள்; எனக்கு இன்னும் பூரணமாய் அவர்களைப்பற்றிய விவ ரம் தெரியாது; ஆயினும் அவர்கள் அபூர்வமான மனிதர் களே; அந்த வீடு ஒரு பட்சியின் இறக்கைகள் போல் இரண்டு பக்கங்களிலும் கட்டிடங்களுடையது; அதில், அக்

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒருபக்கத்திலும், வேலைக்கா ரர் ஒரு பக்கத்திலும் வசிக்கிறார்கள்; அண்ணாசாமிப் பிள்ளை யின் வேலைக்காரன் போஜனம் முதலிவை யெடுத்துக் கொண்டு வேலைக்காரர் இருக்கும் பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு வருவதும் போவதும் தவிர வேறு எவ்விதத்தி லும் இரண்டு பக்கங்களிலுமிருப்போர்க்குப் போக்குவரத்தே கிடையாது; ஆகாரம் முதலிய யாவும் ஒரே வாயிற்படி வழி யாகத்தான் ஒருபக்கமிருந்து செல்லவேண்டும்; அவை செல்ல வேறு வழியில்லை; சிறுவர்களும், செவிலித்தாயும் வீட்டைவிட்டு வெளிச்செல்வதேயில்லை; அண்ணாசாமிப்பிள் ளையோ தன் காரியஸ்தனைக் கூட அழைத்துச் செல்லாமல் எப்போதும் தனியே உலவக்கூடச் செல்வதில்லை; 'நம் எஜமான் எதற்காக மிக்க பயங்கொண்டிருக்கிறான்' என்று வேலைக்காரர்கள் பேசிக்கொள்கிறார்கள்; "அவன் செல்வத் திற்காகத் தன்னைப் பிசாசுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டானாதலால், காலங்கழிந்ததே அது எங்கேவந்து தன்னைப் பிடித் துக்கொண்டு போய்விடுமோவென்பது அவனுக்குப் பெரும் பயம்; அதனாற்றான் அவன் ஒன்றியாக எங்கும் செல் வதில்லை" என்று வரதன் கூறுகிறான்; இவர்கள் யார்? எங் கிருந்து வந்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது; அவர்க ளெல்லாம் மிக்க மூடர்கள்; அண்ணாசாமிப்பிள்ளை இரு முறை கிராமவாசிகளில் சிலரைக் குதிரைச்சாட்டியா லடித்து விட்டான்; எனினும் பணவிரையம்செய்து, போதுமான தொகை அவர்களுக்கு ஈடுகொடுத்ததால், தான், நியாயாதி முன் இழுக்கப்படாமல் தப்பினான்.

இப்போது இவர்களோடு நமது விஷயத்தைப் பொருத்திப் பார்ப்போம்:—கிருஷ்ணராஜுக்கு வந்த கடி தம் இந்த வீட்டிலிருந்துதான் வந்ததென்று கருதுவோம். முன்னமே செய்துகொண்ட ஏற்பாட்டின்படி ஏதோ ஒரு

விவகாரத்தை நடத்துவதற்காக அவனை வரும்படி அங்குள்ளாரால் அவனுக்கு அக்கடிதம் அனுப்பப்பட்டது; இதை யார் எழுதினவர்கள்? இந்த வீட்டிற்குள் இருப்பவர்களில் ஒருவரே; அந்த ஆசாமியும் பெண்பால்; செவிலித்தாயை விட வேறு யார் அதையெழுதக்கூடியவர்கள்? எப்படியிருந்தாலும் இதையே மூலமாக எடுத்துக்கொண்டு விவகாரம் எப்படிச் செல்கிறதென்று பார்ப்போம்: பெரியநாயகியின் வயது நாற்பதென்பதையும் மற்ற விஷயங்களையும் நோக்க, இவர்களுக்கிருக்கும் சம்பந்தத்திற்குக் காரணம் காதல் என்று கருதுவதை யடியோடு விட்டுவிடவேண்டும்.

அக்கடிதத்தை யவள் எழுதியிருந்தால், கிருஷ்ணராஜு மடிந்ததைக் கேள்விப்பட்ட பின்பு என்ன செய்வாள்? அவன் கபடமார்க்கமாய்க் கொல்லப்பட்டிருந்தால் அவள் வாயை மூடிக்கொண்டு பேசாமலிருக்கவேண்டியவளே. ஆயினும், அவள் உள்ளத்தில் அவனைக் கொன்றவர்கள்மேல் வெறுப்பும், கோபமும் இருக்குமென்பதில் சந்தேகமேயில்லை; ஆகையால் நாம் அவளைக் கண்டு பக்குவமாய்க் கலந்துபேசினால் அவள் தன்னாலானவரையும் அவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள உதவிசெய்யலாகும்; அவளைக்கண்டு அவள் உதவியைப்பெற முயற்சி செய்யலாமா? அதுதான் என்முதல் எண்ணம்; ஆனால் இப்போது ஒரு விசேஷ சங்கதியிருக்கிறது; அதாவது, கொலைநடந்த இரவுமுதல் பெரியநாயகி ஒருவராலும் காணப்படவில்லை; அந்த இரவிலிருந்து அவள் மாயமாய் மறைந்துவிட்டாள்; அவள் உயிரோடிருக்கிறாளோ? அல்லது பாபம்! அவள் வரும்படி கூப்பிட்ட மனிதன் கொல்லப்பட்ட அதே யிரவு அவளுக்கும் அக்கதியே நேர்ந்ததோ? அல்லது சிறை வைக்கப்பட்டிருக்கிறாளோ? இவற்றில் எது உண்மையென்பதைத்தான் நாம் தீர்மானிக்கவேண்டும்.

இந்த நிலைமையில் இருக்கும் கஷ்டத்தை நீயுணர்கிறு யல்லவா? இந்த விஷயத்தில் வாரண்ட் பிறப்பிக்கத் தகுதி யான காரணம் இல்லை? ஒரு நியாயாதிபதிமுன் இவற்றைக் கூறினல் நாம் கூறும் சங்கதிகளெல்லாம் அபூர்வக் கதைக ளாகத் தோன்றும்; அந்த அபூர்வமான வீட்டில் திடீரென்று ஒரு ஆள் காணமலிருப்பது ஒரு அதிசயமென்று கருதப் படமாட்டாது; நாம் இச்சங்கதிகளை யறிந்து இவற்றைப் பற்றி யாழ்ந்து சிந்தித்தால் நமக்கு உண்டாகும் உத்தேசங் களில் நம்பிக்கை யிருக்கிறது; அன்னியர்க்கு அப்படிப் புலப்படாது; பெரும்பாலும் பெரிய நாயகி இதே சமயம் பிராணபத்தில் சிக்கிக்கொண் டிருக்கலாகும்; நான் இப் போது செய்யக்கூடியதெல்லாம் அவ்வீட்டின்மேல் கண் வைத்திருப்பதும், என் ஆளாகிய வரதனை அவ்வீட்டு வாயி லில் காவல் வைப்பதுமே; இந்த நிலைமை நீடித்திருக்கும்படி விடலாகாது; சட்டம் ஒன்றும் செய்ய முடியாததாயிருந் தால் நாம் துணிந்து வேலைசெய்ய வேண்டியதே" என்றான்.

விசுவ:—"என்ன செய்ய வேண்டுமென்று நீ கருதுகிறாய்?" என்றான்.

ஆனந்த:—"அந்த வீட்டில் பெரியநாயகியின் அறை இன்னது என்பது எனக்குத் தெரியும்; வெளிவீடுகளி லொன்றின் கூரைமேலிருந்து அந்த அறைக்குச் செல் லலாம்; என் ஏற்பாடாவது: இராத்திரிக்கு நாமிருவ ரும் சென்று இப் பெரிய மர்மத்தின் மூலத்தைக் கண் டறிய முயல்வோம் என்பதே" என்றான்.

இப் பயமற்ற துணிகரமான ஏற்பாட்டைக் கேட்ட விசுவநாதன் திடுக்கிட்டு விட்டான். இது மனதிற்கு உற்சா கத்தை யூட்டத்தக்க வேலையன்று. கொலை மணம் வீசும் அப் பிரமாண்டமான வீடு, அதில் வசிக்கும் மனிதர்களு டைய குரூரத்தன்மை, அவர்களைப்பற்றிய மர்மம், அங்குச்

சென்றால் எத்தகைய எதிர்பாராத ஆபத்துக்கள் நேரிடுமோ வென்ற எண்ணம், இவற்றோடு நாம் செய்யப்போகும் வேலை சட்டத்திற்குப் பொருத்தமானதாகக் கருதப்படமாட்டா தென்ற உணர்ச்சி ஆகிய இவையாவும் சேர்ந்து விசுவநாத னுடைய உற்சாகத்தைக் குறைத்துவிட்டன. ஆனால், ஆனந்தஸிங் கூறும் காரணங்களோடு பொருந்திய நியாயங் கள், அவன் துணிகரமாய்க்கூறும் எந்த விஷயத்திலும் பிர வேசிப்பதால் ஒருகாலும் துன்பம் வாராதென்றே யாருக்கும் நம்பிக்கையை யுண்டாக்கும்; இத்தகைய வழியாயன்றி உண்மையைக் கண்டறியமுடியாது என்பதை விசுவநாதன் நன்கறிவான். ஆகையால் ஆனந்தஸிங் கூறியபடியே செய் யச் சம்மதித்தான்; ஆனால் அத்தகைய துணிகரச்செயல் நடைபெற வேண்டுமென்ற அமைப்பில்லை.

மாலை சுமார் ஐந்து மணி யிருக்கும்; பொழுதமர்ந்து கொண்டிருக்கிறது. அச்சமயம் ஒரு கிராமவாசி மனத்துடிப் போடு இவர்களிருக்கும் அறைக்குள் ஓடிவந்தான். விசுவ நாதன் வியப்படைந்து ஆனந்தஸிங்கின் முகத்தை நோக்கி னான். வந்த மனிதன் ஆத்திரத்தோடு "ஆனந்தஸிங்! அவர்களெல்லாம் போய்விட்டார்கள்; கடைசி வண்டித் தொடரில் சென்றார்கள்; அம்மாது அவர்களிடமிருந்து தப் பித்துக்கொண்டு வந்துவிட்டாள்; அவளை இதோ ஒரு வண்டியில் கொண்டுவந்திருக்கிறேன்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட ஆனந்தஸிங் மிக்க சந் தோஷத்தோடு "பலே! பேஷ்! வாதப்பா!" என்று துள்ளி எழுந்து விசுவநாதனை நோக்கி "நண்பனே! இப்போது இடையில் அகப்படாமல் இருந்த சங்கதிகள் கிடைத்து விடும்" என்றான். அவ்வாறு கூறியதும் ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் உடனே எழுந்துபோய் வண்டியிலிருந்த ஆளை உள்ளே யழைத்து வந்தார்கள்.

186506

அம்மாதின் முகத்தைப் பார்த்தபோதே அவள் சமீப காலத்தில் மிக்க துன்பத்தை யனுபவித்திருக்கிறாள் என்பது புலப்பட்டது. அவள் மிக்க சோர்வடைந்து தலையை மார்பு வரையில் தொங்கவிட்டுக்கொண்டிருந்தாள். அவள் மெதுவாய்த் தன் தலையை நிமிர்த்தி அவர்களை நோக்கினாள். அவள் கண்கள் சொருகிக்கொண்டு போவனவா யிருந்தன. ஆனந்தஸிங் உடனே அவளுக்குப் போதை மருந்தளிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்துகொண்டான்.

அவ்வாறு தெரிந்துகொண்டதும் அம்மாதை யழைத்து வந்து ஒரு மஞ்சத்தில் படுக்கவைத்து உடனே அவளை நோக்கி "அம்மா! நீ பின்னால் யாவும் கூறுவாய்; நாங்களெல்லாம் உன் சினேகிதர்களே; இப்போது நான் முன்னாடி யுன்னை யொரு கேள்விமட்டும் கேட்கிறேன்; அதற்கு உண்மையான பதிலைக் கூறிவிடு; பிறகு விவரம் கூறுவாய்; நான் கேட்கும் கேள்வியாவது, கிருஷ்ணராஜைக் கொன்றவன் அண்ணாசாமிப்பிள்ளை தானே? அதைமட்டும் கூறு" என்றான்.

பெரியநாயகி "ஆம்; அவனே; இது சத்தியம்" என்றாள்.

ஆனந்தஸிங் உடனே ஒரு கடிதத்தில் என்னவோ சில சங்கதிகளையெழுதி விசுவநாதனிடமளித்தான். விசுவநாதன் அதை வாசித்துப்பார்த்ததும் ஆனந்தஸிங்கை யுற்றுநோக்கிவிட்டு எழுந்து துரிதமாய்ச் சென்றான்.

விசுவநாதன் சென்றபின் வரதன் ஆனந்தஸிங்கை நோக்கிச் சமாசாரம் கூறத் தொடங்கி,

"நான் தாங்கள் கூறியபடி வாயிற்படி யருகில் மறைவான விடத்தில் காத்துக் கொண்டிருந்தேன்; உள்வாயிற்படியில் வண்டி ஆயத்தமாய் வந்து நின்றதும் நான் ஜாக்கிரதையாய்க் கவனிக்கத் தொடங்கினேன்; அண்ணாசாமிப்

பிள்ளையும் மற்றவர்களும் வந்து வண்டியில் ஏறியதைப் பார்த்தேன்; அவர்கள் இம்மாதின் தோளைப்பற்றியழைத்து வந்து வண்டியிலேற்றினார்கள்; இவள் தூக்கத்தில் நடப்பவள் போல் நடந்து வந்தாள்; அவர்கள் இவளை யிழுத்துக் கொண்டு வந்தார்கள்; எனக்கு இவள் புத்தி சுயாதீனத்தி லில்லை யென்பது புலப்பட்டது; இவர்கள் எங்கோ வெளியில் புறப்படுகிறார்கள் என்பதும் தெரிந்தது. நான் துரிதமாய் எதிர் வாடையிலுள்ள வண்டி மேட்டிற்குச் சென்று எனக்குச் சினேகனான ஒருவன் வண்டியிலேறினேன். அப்போது இவர்கள் வண்டி இரயில் ஸ்டேஷனுக்குச் செல்லும் பாட்டைக்குத் திரும்புவதைக் கண்டு அதைப் பின் தொடர்ந்து சென்றேன்.

இவர்கள் வண்டி ஸ்டேஷனில் சென்று நின்றதும் ஒருவன் பிரயாணச் சீட்டுகள் வாங்கி வந்தான்; அதற்குள் வண்டி வந்துவிட்டது; இவர்கள் வண்டியில் போய் ஏறினார்கள்; அப்போதும் இம்மாதைப் பிடித்தேயழைத்துச் சென்றார்கள்; யாவரும் வண்டியிலேறினார்கள்; அச்சமயம் இம்மாது எப்படியோ புத்தி சுயாதீனமடைந்து திடீலென்று அவர்களிடமிருந்து திமிறிக் கொண்டு சட்டென்று வண்டியிலிருந்து கீழே குதித்து விட்டாள்; ஆயினும், அவர்களில் ஒருவன் சட்டென்று கீழே குதித்து இவளைப் பிடித்து வண்டிக்குள் இழுத்துச்செல்ல முயன்றான்; வண்டி புறப்படும் சமயமாய் விட்டது; நான் இவளுக்கு உதவி செய்து இவளை யழைத்து வந்து வண்டியிலேற்றிக்கொண்டு வந்தேன்; இன்னொரு சங்கதி யெனக்கு நினைவில் உறுத்தியது. அதாவது யாரோ ஒரு மனிதன் மிக்க அக்கரையாய் இவர்கள் வண்டியேறிச் செல்வதைக் கவனித்தான்" என்றான்.

அதே விநாடி கதவு தட்டப்பட்டது. வாதன் சென்று

கதவைத் திறந்தான்; ஒரு மனிதன் உள்ளே வந்தான். அவனைக் கண்டதே வாதன் திடுக்கிட்டு ஆனந்தஸிங்கை நோக்கி "இவர்தான், இவர்தான்" என்றான். ஆனந்தஸிங் புன்னகையோடு வந்தவனை நோக்கி "சம்பு! என்ன சங்கதி?" என்றான்.

சம்பு:—"அண்ணாசாமிப் பிள்ளை முதலியவர்கள் தானூருக்கு வண்டியேறிச் சென்றார்கள்; அம்மாது அவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டாள்; நான் அவளுக்கு உதவிசெய்யக் கருதினேன்; அதற்குள் அவர்களைப் பின்பற்றி வந்த இந்தமனிதர் அவளுக்கு உதவிசெய்து அவளை யொரு வண்டியிலேற்றிக்கொண்டு வந்தார்; இவர் செல்லுமிடத்தை யறிந்துகொண்டு தங்களிடம் வரலாமென்று கருதி இவர் வண்டியைத் தொடர்ந்து வந்தேன்; இவர் நேராய் இங்கு வந்ததைக் கண்டபின் நான் ஐயுற்றபடி யிவரும் நம்மைச் சேர்ந்தவரே யென்று எண்ணிக்கொண்டேன்" என்றான்.

அதன் பிறகு ஆனந்தஸிங் உடனே தந்திப் பாரத்தில் ஏதோ சமாசாரம் எழுதி அந்தச் சம்பு என்பவனிடம் அளித்துக் கொஞ்சம் பணமும் கொடுத்து "இதைக் கொண்டுபோய்த் தந்தி கொடுக்கும் இலிகிதனிடம் கொடுத்து உடனே அனுப்பிவிடச் சொல்" என்றான்.

அவன் அவ்வாறே சென்றான். பின் ஆனந்தஸிங் பெரிய நாயகிக்குத் தக்க சிகிச்சை செய்தான். அவள் கால் மணி நேரத்திற்குள் புத்தி சுயாதீனமடைந்து எழுந்து உட்கார்ந்தாள்.

இதற்கிடையில் இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணனை யழைத்து வரும்படி ஆனந்தஸிங் ஒரு ஆளை யனுப்பியிருந்த தால் அவனும் அங்கு வந்தான். அவன் அம்மாதைக்கண்டதும் "பேஷ்; நான் முக்கியமாய்த் தேடிக்கொண்டிருந்த

ஆளையே நீ பிடித்துவிட்டாய்” என்று ஆனந்தஸிங்கின் கரத்தைப்பற்றிக் குலுக்கினான். ஆனந்தஸிங் அவனையுற்று நோக்கியபோது அவன் “ஆம்; ஆரம்பத்திலிருந்து நீ நோக்கம் வைத்த விடத்திலேயே நானும் நோக்கம் வைத்திருந்தேன்” என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட ஆனந்தஸிங் மிக்க வியப்படைந்து “என்ன? அண்ணாசாமிப்பிள்ளையா?” என்றான்.

இன்ஸ்:—“ஆம்; நீ மேட்டுமாளிகையில் இருக்கும் புதர்களில் பதுங்கியிருந்தபோது நான் அங்கிருந்த ஒரு பெரிய மரத்தின்மேல் ஏறிக்கொண்டிருந்தேன்; கீழே நீ யிருப்பதைப் பார்த்தேன்; ஓகோ! இப்போது யார் இச்சாட்சியை முன்னாடிப் பிடித்துக்கொள்பவரோ அவரே வெற்றி பெற்றவர் என்று எண்ணிக்கொண்டேன்” என்றான்.

ஆனந்தஸிங்:—“அப்படியாயின் ஏன் அந்த வேலைக்காரனைச் சிறைப்படுத்தினாய்?” என்று கேட்டான்.

பாலகிருஷ்ணன்:—“அண்ணாசாமிப்பிள்ளை யென்று சொல்லிக்கொள்கிற ஆசாமி, தன்மேல் பலர் சந்தேகப்படுகிறார்கள் என்பதை யெப்படியோ தெரிந்துகொண்டான்; அதனால் தனக்கு ஆபத்து நேரிடலாகும் என்ற எண்ணம் அவன் மனதில் பதிந்திருக்கும்; அவ்வெண்ணம் இருக்கிறவரையில் அவன் பதுங்கிக்கொண்டேயிருப்பானன்றி வெளியில் புறப்படவே மாட்டான்; அந்த வேலைக்காரனைக் கைது செய்தால் அண்ணாசாமிப்பிள்ளை ‘ஓகோ! இவர்கள் நம்மேல் சந்தேகங்கொள்ளவில்லை’ என்று எண்ணிக்கொண்டு வெளியில் புறப்படுவான்; அப்போது நமக்கு வேண்டிய ஆளைப் பிடித்துக்கொள்ள நமக்குச் சந்தர்ப்பம் வாய்க்கும்

என்று கருதியே நான் அப்படி அவ்வேலைக்காரனைச் சிறை செய்தேன்" என்றான்.

ஆனந்தஸிங் பாலகிருஷ்ணன் தோள்மேல் கரத்தை வைத்து, "நீ உன் உத்தியோகத்தில் மேல் படியில் ஏறுவாய்; உனக்குச் சரியான யுக்தியும் ஆலோசனையுமிருக்கின்றன" என்றான்.

பாலகிருஷ்ணன் "மிக்க வந்தனம்; நான் ஒரு ஆளை சதா இரயில் ஸ்டேஷனிலிருந்து கவனிக்கும்படி ஏற்பாடு செய்திருந்தேன்; இம்மாது அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டோடியபோது அவன் எப்படியோ தவறிவிட்டான்; ஆயினும் உன் ஆள் இவளைப் பிடித்துக் கொண்டான்; எப்படியும் விவகாரம் அனுகூலமாய் விட்டது; இவள் சாட்சியம் இல்லாமல் நாம் ஆளைச் சிறை செய்யலாகாது; சீக்கிரம் இவள் வாக்கு மூலத்தைக் கேட்போம்" என்றான்.

ஆனந்த:—"இவள் இப்போதுதான் கொஞ்சங் கொஞ்மாய்ச் சுகமடைகிறாள்; பாலகிருஷ்ணம்! இந்த அண்ணாசாமிப்பிள்ளை யென்பவன் யார்?" என்றான்.

பால:—அண்ணாசாமி என்பவன் யாரென்றால், அவன்றான் மறவசேனன்.

அதைக் கேட்டதே ஆனந்தஸிங் சொல்லொணா வியப்படைந்து, "என்ன! வேடபுர வேங்கையா?" என்றான். உடனே அத்துஷ்டனுடைய சங்கதிகள் யாவும் பளிச்சென்று அவன் நினைவிற்கு வந்தன. வேடபுரம் என்பது அமெரிக்கா கண்டத்தின் மத்தியப்பிரதேசத்தில் உள்ள ஒரு சிறு நாடு. அந்த மறவசேனன் என்பவன் சற்றும் நாகரீகமில்லாத அந்நாட்டுச் சனங்களை யடக்கி அரசாண்டு வந்தான். அவன் சுத்த இரத்தப் பிரியனாய்ப் பூரண இராக்ஷசத் தன்மையோடு மிக்க கொடுங் கோன்மையாய் அரசாண்டு வந்தான். அவனுடைய பெயரும் செய்கைகளும் உலகப்

பிரசித்தியடைந்தன. அவன் மிக்க பலமும், தந்திர சாமார்த்தியமும், சுறுசுறுப்பும், முரட்டுத் தைரியமு முடையவன். சுமார் பனிரண்டு வருடங்கள்வரை அச்சனங்கள் நடுங்கி யொடுங்கும்படி அவர்களைக் அலைக்கழித்து விட்டான். அக்காலத்தில் அமெரிக்கா கண்டத்தின் மத்திய பாகமனைத்திலும் உள்ளவர்கள் இவன் பெயரைக் கேட்டால் நடுங்குவார்கள்.

ஜனங்கள் எவ்வளவுதான் பயந்திருந்தாலும் கொடுங்கோன்மையை எவ்வளவு காலம்தான் சகித்துக் கொண்டிருப்பார்கள்? அவர்கள் சற்றும் நீதி யென்பதே யில்லாத அத்துஷ்டனுடைய அக்கிரமங்களைச் சகித்துச் சகித்துக் கடைசியில் 'இத்துன்பத்தினும் மடிவதே மேல்' என்று தீர்மானித்தார்கள். அவர்கள் பயமனைத்தும் உயிரைத் திரணமாக மதிக்கும் துணிகரமாய் மாறிவிட்டது. கடையில் ஏககாலத்தில் யாவரும், 'அவனை யொழிப்பதே சரி' யென்று துணிந்து விட்டார்கள்.

மறவசேனன் கல்மனமுடைய பரம துஷ்டனாயினும் தந்திரமும் சுறு சுறுப்பு முடையவனாதலின் எவ்வாறோ ஜனங்களின் எண்ணத்தை யறிந்து அவனுக்கு மிக்க நம்பிக்கையான சில மனிதர் உதவியால் அக்கிரமமாகச் சம்பாதித்த பெரும் பொருட் பொக்கிஷத்தை யெடுத்துக் கொண்டு, தன் இரண்டு புத்திரிகளுடனும், தன் அக்கிரமங்களுக்கெல்லாம் உடந்தையாக விருந்த காரியஸ்தனாகிய குரூர சிங்கனுடனும் இரவில் கப்பலேறி அவ்வூரைவிட்டு நீங்கிவிட்டான்.

மறுநாட் காலை ஜனங்கள் அவனுடைய அரண்மனையைத் தாக்கி அதனுள்ளே நுழைந்து பொக்கிஷசாலை காலியாக விருப்பதையும், அம்மறவசேனன் தன் காரியஸ்தனோடும் குடும்பத்தோடும் ஓடிவிட்டதையும் உணர்ந்தார்

கள். அது முதல் அவன் உலகில் எங்கிருக்கிறுன் என்பதே ஜனங்களுக்குத் தெரியவில்லை ; பத்திரிகைகளிலெல்லாம் அதுவே பிரஸ்தாபமாக விருந்தது.

ஆனந்த்ஸிங் 'வேடபுரவேங்கையா' என்றதற்கு பால கிருஷ்ணன் "ஆம்; அவனே; நீ புத்தகத்தைப் பார்ப்பாயா யின் வேடபுர இராஜாங்க கொடியின் நிறம் பச்சையும் வெள் ளேயு மென்றறிவாய்; அதேயக்கடிதத்தில் வரையப்பட்டிருந் தது; அவன் அண்ணுசாமிப்பிள்ளை யென்று பெயர் வைத் துக் கொண்டான்; ஆயினும் அவன் கடைசியாகப் பருதி புரத்திலிருந்து இங்கு வந்தான்; நான் பருதிபுரம் சென்று அங்கு அவன் தங்கிவந்த இடங்களை ஒன்றின் பின் ஒன் ருகத் தொடர்ந்துபோய்க் கடைசியில் அவன் கப்பலில் வந் திறங்கிய துறைமுக நகரம் சென்று அவன் யாரென்ற உண் மையைக் கண்டு பிடித்தேன்; வேடபுர ஜனங்கள் அவனே மறக்கவில்லை; அவன் மேல் வஞ்சந் தீர்த்துக் கொள்வதே சரி யென்று துசங்கட்டிக் கொண்டார்கள்; அவர்கள் எங் கும் அவனைத் தேடிக்கண்டுபிடிக்க முயன்ருர்கள்; ஆனல் இப்போதுதான் அவன் அகப்பட்டான்" என்ருன்.

பெரியநாயகி சுகமடைந்து இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்ததால் பாலகிருஷ்ணன், 'இப்போது தான் இவன் அகப்பட்டான்' என்றதே,

"இல்லை யில்லை; ஒருவருடத்திற்கு முன்பே அவர்கள் அவனைக் கண்டுபிடித்துவிட்டார்கள்; முன்னமே ஒரு முறை அவனைச் சரிப்படுத்திவிட முயன்ருர்கள்; ஆயினும் அவன் எப்படியோ தப்பித்துக் கொண்டான்; மறுபடி இப்போது கம்பீரமானவனும் பெருந் தன்மையுடையவனுமாகிய கிருஷ் ணராஜைக் கொன்று விட்டு உயிரோடு தப்பிப்போய் விட் டான்; ஆயினும் அவனைக் கொல்ல வேறெருவன் வருவான்; அவன் அழியும் வரை ஒருவர் பின் ஒருவராய்ப் பலர் வந்து

கொண்டுதா னிருப்பார்கள்; அவன் மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளுமட்டும் அவர்கள் உறங்கவே மாட்டார்கள்" என்று வெறுப்போடு கூறினாள்.

ஆனந்த:—"இருக்கட்டும்; நமது நாட்டாளாகிய நீ இக் கொலை பாதகன் கூட்டத்தில் எவ்வாறு சம்பந்தப்பட் டிருக்கிறாய்?" என்றான்.

பெரியநாயகி:—"நானா? இவ்வுலகில் வேறெவ்வழியிலும் நியாயம் கிடைப்பதாயில்லை யாதலால் நான் இதில் சேரவேண்டியவளானேன்; சில வருடங்களுக்குமுன் வேடபுரி இராச்சியத்தில் இக்கொலைபாதகனால் அநி
யாயமாய்ச் சிந்தப்பட்ட இரத்த
பற்றி இத்தேச சட்டத்திற்
அக்கறை யிருக்கி
அந்நாட்டாருடைய
எடுத்துக்கொண்டு வ
கொள்ளையைப் பற்
உங்களுக்கு இது எங்
லும் அன்னிய நாட்டில்
களுக்கு இவையாவும் பிர
கள் பெருந்துயரங்களை நேர
றோம்; எங்கள் வரையில் இந்தக் ம
மறவசேனனை விடக் கொடிய பிராணி
லோகத்திலு மில்லையென்றே நாங்கள்
திருக்கிறோம்; இச்சண்டாளப் பேயின்மேல் பூ
வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் வரையில் எங்க
மனதில் சமாதானம் ஏற்படாது" என்றாள்.

ஆனந்த:—இவற்றில் சந்தேகமே யில்லை; நீ கூறிய
உண்மையே; அவன் அவ்வாறுதான் நடந்
டான்; அவனுடைய கோரமான அக்கி

களைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனால் அவனால் உனக்கு எவ்விதமாகப் பாதகம் ஏற்பட்டது?” என்றான்.

பெரியநாயகி:—யாவும் கூறுகிறேன் நீங்கள் கேளுங்கள்; தன் இராஜாங்கத்தில் யாரேனும் கொஞ்சம் செல்வாக்கடைந்து தனக்குச் சமமான நிலைமைக்கு வந்துவிடத் தகுதி யுடையவர்களாக அவனுக்குக் காணப்படுவார்களாயின் அச்சண்டாளன் ஒருகாரணமு மின்றி அவர்களை யிரகசியமாய்க் கொன்று விடுவான்; இம்மாதிரி அவனால் கொல்லப்பட்ட நிரபராதிகளான உத்தமர்
கள்; நான்...நான்...என் உண்மையான
கி; நான் துரைசத்தனம் ஸர்தாரின்
டைய மந்திரியாய் நமது
தார்; அச்சமயம் அவர்
ணம் புரிந்து கொண்டார்;
ம் யோக்கியதையுமுடைய
யாவரும் அவருடைய புத்தி
பெருந்தன்மையான குணங்
ண்டாடினார்கள்; ஆகவே அவ
லவாக்குண்டாகியது; அச்சண்டாளன்
பற்றிக் கேள்விப்பட்டு எதோ ஒரு காரணங்
அவரை யுடனே தன்னிடம் புறப்பட்டு வரும்படி
க்குக் கடிதம் எழுதினான். அவர் அவ்வாறே யங்
சென்றதும் அவன் அவரைச் சுட்டுக் கொன்று
விட்டான்; இங்கிருந்து செல்லும்போதே இவ்வாறு
அவன் எண்ணங்கொண் டிருக்கிறானென்பதை என்
ணவர் அறிந்துகொண்டார் போலும்; அதனாலேயே
ர் என்னைக் கூட அழைத்துச்செல்ல மறுத்துவிட்
நான் அதற்குக் காரணம் கேட்டதற்கு ‘தற்சம

யம் உன்னை யழைத்துச்செல்வது என் மனதிற்கு நிம்மதியாயில்லை; நான் அங்குச் சென்றபின் உன்னை வரவழைப்பது எனக்கு யுக்தமாகத் தோன்றினால் அப்படியே வரவழைத்துக் கொள்கிறேன்' என்று கூறிச்சென்றார். அவருடைய திரண்ட ஆஸ்தியையும் இச்சண்டாளனே யபகரித்துக் கொண்டான். மிகச் சொல்பமே யெனக்கு மிச்சமாய்க் கிடைத்தது.

---

## 7-வது அத்தியாயம்.

### பெரிய நாயகியின் சரித்திரத் தொடர்ச்சி:—

நான் என் கணவருக்கு நேர்ந்த கோரமான மரணத்தைக் கேட்டதுமுதல் பெருந்துயரில் அமிழ்ந்து கிடந்தேன்; கடைசியில் இச்சண்டாளன் தன் பதவியை யிழந்து ஓடிவிட்டான் என்ற சங்கதியைக் கேள்விப்பட்டேன்; ஆயினும் இவனுடைய கொலைபாதகச் செயலால் மாண்ட உத்தமர்களுடைய புத்திரர்கள், சிநேகர்கள், சுற்றத்தார்கள் ஆகிய இவர்களுக்கு இவனை அப்படியே விட்டுவிட மனம் பிடிக்கவில்லை; இவர்களெல்லாம், தமது தந்தையர், சிநேகர், சுற்றத்தார்களை யெல்லாம் இழந்ததோடு, அவர்களுடைய சொத்துக்களையும் இழந்து துயரத்தோடு வருந்திக்கொண்டிருக்க, அப்படி அநேகரைக் கொன்றுவிட்டு அவர்கள் செல்வத்தை யெல்லாம் அபகரித்துக்கொண்ட படுபாதகனாகிய அவன் அச்செல்வத்தால் சுகமாய் வாழும்படி அவனை விட்டுவிட இவர்களுக்கு எப்படி மனம்வரும்? ஆகையால் இவர்கள் யாவரும் ஒரு சங்கமாய்க் கூடி அச்சண்டாளன் மேல் சரியாய் வஞ்சம் தீர்த்துக் கொள்ளுமட்டும் தாங்கள் பிரிவதில்லை யென்று சத்தியம் செய்துகொண்டார்கள். இவர்களில் பிரதானமானவர்களில்

இரண்டொருவர் இங்குவந்து என்னிடம் தங்கள் எண்ணத்தைக் கூறியபோது நானும் அவர்களில் ஒருத்தியாகச் சேர்ந்து கொள்வதாய் அவர்களுக்கு வாக்களித்தேன்; அதன்மேல் கடைசியில் அவன் மாறுபெயர் வைத்துக் கொண்டு காலங்கழிப்பதை யறிந்தபோது நாங்கள் ஆலோசனை செய்து, நான் தந்திரமாய் இவன் குடும்பத்தில் போய்ச் சேர்ந்துகொண்டு வெளியிலிருக்கும் எங்கள் கூட்டத்தாருக்கு உதவியாயிருக்க வேண்டுமென்று தீர்மானித்தோம்.

அதன்படியே நான் பெரியநாயகியென்று பெயர் வைத்துக்கொண்டு அவன் பெண்களுக்குச் செவிலித்தாயாகப்போய் அமர்ந்தேன்; நான் மணம் செய்து கொண்டாலும் என் கணவரோடு வேடபுரிக்குச் செல்லவில்லை யாதலால் அச் சண்டாளனுக்கேனும், அவனைச் சேர்ந்தவர்களுக்கேனும் என் உருவமே தெரியாது; ஆகையால் அவன் போஜனம் செய்யும் ஒவ்வொரு முறையும் நான் ஆகாரவகைகளை யெடுத்துச்சென்று அவனுக்குப் பரிமாறும்போது அவன் என்னைப் பார்த்தாலும், 'நாம் அநீதமாய்க் கொன்றுவிட்ட நிரபராதியாகிய நமது மந்திரியினுடைய மனைவியே இப்போது நம்மெதிரில் நிற்பவள்' என்று அச்சண்டாளன் என்னைக் கண்டுகொள்ளவேயில்லை.

நான் புன்னகையோடு அவனுக்கு ஆகாரம் வட்டித்துக் கொண்டும், அவன் புத்திரிகளுக்கு என்கடமையைச் செய்து கொண்டும் "ஓடு மீனோட வொருமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு" என்பதற்குத்தக என் சமயம் எப்போது வருமென்று காத்திருந்தேன்; பரிதிபுரத்தில் ஒரு முறை எங்கள் கூட்டத்தார் அவனைக் கொல்லப் பிரயத்தனப்பட்டு அது தவறிப்போயிற்று; தன்னால் கொல்லப்பட்டவர்களின் மனிதர்கள் தன்மேல் வஞ்சந் தீர்த்துக்கொள்ளக் கருதி தன்னைத்தொடர்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை அச்

சண்டாளன் எப்படியோ யுணர்ந்துகொண்டான்; ஆகையால் அவர்களுக்கு அகப்படாமல் தப்பித்துக்கொள்ளக் கருதி ஒரு இடத்தில் தங்காமல் அடிக்கடி ஊர்ஊராய் மாறிக் கொண்டே யிருந்தான்; கடைசியில் முதலில் வசித்து வந்த இந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

அப்பாவியால் கொல்லப்பட்ட உயர்ந்த அந்தஸ்தி லிருந்த ஆட்களில் கிருஷ்ணராஜின் தந்தையும் ஒருவர்; ஆகையால் கிருஷ்ணராஜனும், வேறு மூவரும் இதே காரணத்தால் அவன் மேல் வஞ்சந் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று அடங்காக் கோபமும் ஆத்திரமு முடைய வர்களாய், அவன் எப்படியும் கடைசியில் இங்குத் திரும்பி வருவானென்றுணர்ந்து இங்கு வந்து காத்துக்கொண்டிருந் தார்கள்; அவர்கள் பகலில் ஒன்றும் செய்ய முடியாது; ஏனெனில் மறவசேனன் எந்த வேளையில் தனக்கு ஆபத்து வருமோ என்று அச்சங் கொண்டிருந்தானாதலால் எப் போதும் மிக்க ஜாக்கிரத்தையோடேயே யிருந்து வந்தான்; எத்தகைய சமயமாயினும் சரி; தன் காரியதரிசியும், குரூர சிங்கன் என்ற உண்மைப் பெயருடையவனுமாகிய உலகப் பனைக் கூட அழைத்துச் செல்லாமல் வெளியில் புறப்படு வதே யில்லை.

இராக்காலத்தில்மட்டும் அவன் தனியேதான் ஒரு அறையில் சயனித்துக்கொள்வான்; அச்சமயந்தான் அவனை நெருங்கலாகும்; அதிலும் தினம் ஒரே அறையில் படுப்ப தில்லை; அவன் போசனம் செய்து முடியும் சமயந்தான் இன்ன அறையில் சயனிக்கப் போகிறான் என்பது தெரியும்; ஆகையால் முன்னுடி நாங்கள் கலந்து ஏற்பாடு செய்து கொண்டிருந்தது போல் நான் கிருஷ்ணராஜனுக்கு முடிவான சமிக்கைகளை யறிவித்தேன்; வீட்டிற்குள் வரும் பாதைக்கு நேராய் மேலே என் அறையிலுள்ள சாளரத்தில் நான்

இராந்தல் வெளிச்சம் காட்ட வேண்டுமென்றும், அவன் படுத்திருக்கும் அறையின் சாளரம் திறந்திருந்தால் பச்சை இராந்தல் காட்ட வேண்டுமென்றும், சாளரம் மூடப்பட்டிருந்தால் வெள்ளை இராந்தல் காட்ட வேண்டுமென்றும், அப்படி வெள்ளை காட்டினால், வருகிறவர் இன்று காரியம் முடியாதென்று கருத வேண்டுமென்றும் நாங்கள் எங்களுக்குள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தோம்.

ஆனால் கெட்ட காலத்தால் எங்கள் ஏற்பாடு அடியோடு தலைகீழாய் விட்டது; அக் குரூர சிங்கன் எவ்வாறோ என் மேல் சந்தேகங்கொண்டு என் நடக்கைகளைக் கவனித்துக்கொண்டேயிருந்திருக்கிறான்; நான் அதை யறிந்து கொள்ளாமல் என் அறையில் உட்கார்ந்து கிருஷ்ணாராஜனுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினேன்; கடிதம் எழுதி முடிந்தது; அதை மடித்துக் கொண்டிருக்கும்போது குரூர சிங்கன் பின்பக்கம் வந்து என்னைப் பிடித்துக்கொண்டான்; உடனே அவன் எஜமானனாகிய சண்டாளனும் வந்துவிட்டான்; பின் இருவருமாக என்னை யொரு அறைக்குக் கொண்டுபோய், எனக்குத் தண்டனை யளிக்கத் தொடங்கினார்கள்; அவர்கள் அப்போதே என்னைக் கொன்றுவிட்டிருப்பார்கள்; ஆனால் 'இவளைக் கொலை செய்துவிட்டுப் பிறகு நாம் எப்படித் தப்பித்துக்கொள்ள முடியும்' என்ற கலக்கம் அவர்களுக்குண்டாய் விட்டது; அக்கலக்கத்தாலேயே யச்சமயம் என்னைக் கொல்லாமல் விட்டுவிட்டார்கள்; ஆனால் கிருஷ்ணாராஜை யொரே மட்டாகத் தொலைத்துவிடுவதென்று அச்சண்டாளர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள்; அச்சமயம் அது எனக்குத் தெரியாது; அவர்கள் நான் சத்தமிடாதபடி என் வாயில் துணியை யடைத்து விட்டார்கள்; அக்கொலைபாதகன், நான் கிருஷ்ணாராஜின் விலாசத்தை யெழுதிக்காட்டு மட்டும் என் காத்தைப்பிடித்து முறுக்கி

ஞன்; விலாசத்தை வெளியிடுவதால் கிருஷ்ணராஜுக்கு அத்தகைய ஆபத்து நேருமென்று மட்டும் எனக்குத் தெரிந்திருந்தால், அப்பாதகன் என் கரத்தை முறுக்கி யடியோடு பிய்த்து விட்டிருந்தாலும் நான் அதை வெளியிட்டிருக்க மாட்டேன்.

குரூரசிங்கன் நான் எழுதிய கடிதத்திற்குத் தானே மேல் விலாசம் எழுதித் தன் சட்டைக் கையிலிருந்த பொத்தானுல் முத்திரையிட்டு அதை ஒரு ஆளிடம் கொடுத்துக் கிருஷ்ணராஜுக் கனுப்பினுன்; கிருஷ்ணராஜை யப்பாதகர்கள் எவ்வாறு கொன்றுர்களென்பது எனக்குத் தெரியாது; ஆனுல் மறவசேனனே அவனைக் கொன்றவன் என்பது மட்டும் சத்தியம்; ஏனெனில் குரூரசிங்கன் வெளியில் செல்லவேயில்லை; அவன் என்னிடமே காவலாக விருந்தான்; அங்குள்ள புதர்களின் வழியாகத்தான் வீட்டிற்கு வரும் பாதை செல்கிறது; அச்சண்டாளன் அங்குப் பதுங்கியிருந்து கிருஷ்ணராஜு வரும்போது அவனைப் பின்பக்கம் அடித்துக் கொன்றுவிட் டிருப்பான்; முதலில் அவர்கள் அவனையுள்ளே வரவிட்டுக் கொன்று கள்ளன் என்று கொன்றுவிட்டதாகக் கூற ஆலோசித்தார்கள்; பிறகு 'அப்படிச் செய்தால் மரண விசாரணை நடக்கும்போது எக்காரணத்தாலாவது நம்முடைய உண்மை வெளிப்பட்டுவிட லாகும்; பிறகு விஷயங்கள் ஆபத்துக்கிடமாய் முடிந்தாலும் முடியும்; அதோடு நாம் இன்னுரென்பது பகிரங்கமாய் வெளியாகிவிடின் நமக்கு எப்படியாவது ஆபத்து நேரிட்டுவிடும்' என்று சிந்தித்து அவ்வாறு செய்யவில்லை; கிருஷ்ணராஜு மடிந்தால் அதோடு பீதியடைந்து மற்ற ஒருவரும் தங்களுக்குத் தீங்கிழைக்கத் துணியமாட்டார்கள் என்றும், அவர்கள் முயற்சி அதோடு நின்றுவிடுமென்றும் அப்பாதகர்கள் எண்ணினுர்கள்.

இப்போது அவர்கள் செய்த காரியம் எனக்குத் தெரியாதிருக்குமாயின் அவர்களுக்கு ஒரு கலக்கமுமிராது; என் உயிர் ஒவ்வொரு விநாடியும் பெரிய ஆபத்தில்தானிருந்தது என்பது எனக்குத் தெரியும்; அவர்கள் என்னை யொரு அறையில் அடைத்துவிட்டார்கள்; என் நெஞ்சு நடுங்கும்படியான விதமாய் என்னைப் பயமுறுத்தினார்கள்; என்னை மிக்க குரூரமாக இம்சித்தார்கள்; இதோ என் புயத்திலிருக்கும் குத்தையும், கரம் நிறையப் பட்டிருக்கும் காயங்களையும் பாருங்கள்; கத்தியால் குத்தின காயங்கள் இவை; ஒரு முறை நான் சாளரத்தினருகில் ஓடிக் கூச்சலிட முயன்றேன்; உடனே அவர்கள் என்னைக் கட்டிவிட்டு என்வாயில் துணி யடைத்துவிட்டார்கள்; கடந்த ஐந்து நாட்களாக நான் இத்தகைய கொடிய சிறை வாசத்தில் இருந்தேன்; அவர்கள் கொடுத்த ஆகாரமோ உயிர் உடலில் பொருந்தியிருக்கக்கூடப் போதுமானதல்ல; இன்னும் இரண்டு மூன்று நாட்கள் அதே நிலைமையிலிருந்தால் நான் சகித்துக்கொண்டிருக்க முடியாது; இன்று காலை எனக்கு நல்ல ஆகாரம் போதுமான வரையில் அளிக்கப்பட்டது; ஆனால் நான் அதைப் புசித்ததும், அவர்கள் அதில் மயக்கமருந்து வைத்துவிட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன்; நான் எவ்வளவு சமாளித்தாலும் என் கண்கள் சொருகிக் கொண்டுபோயின; நான் நடப்பது எனக்கு நித்திரையில் நடப்பதுபோ லிருந்தது; என் கரங்களைப்பற்றி அவர்கள் என்னை யிழுத்துக்கொண்டு போய் வண்டியில் ஏற்றினார்கள்; எனக்குபாவும் கனவுபோல் தோன்றின; அதே நிலைமையில் நான் அவர்களால் இரயில் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டேன்; அவர்கள் இரயில் வண்டியில் என்னை யேற்றிவிட்டார்கள்; ஆச்சு வண்டி புறப்படப்போகிறது; கொஞ்சம் நகர்வது போலவே யெனக்குப்

புலப்பட்டது; அச்சமயம்தான் எனக்குத் தெய்வகதியாய்ச் சற்று அறிவு விளங்கிற்று; 'நாம் தப்பித்துக் கொள்ள இது தான் சமயம்; இன்றேல் இச்சண்டாளர்கள் வண்டி வேகமாய்ச் செல்லும்போது நம்மை வெளியில் தள்ளிவிட்டு நாம் தவறி விழுந்துவிட்டதாய்க் கூறிவிடுவார்கள்' என்பது என் புத்தியிற்பட்டது; நான் உடனே வண்டியிலிருந்து கீழே குதித்துவிட்டேன்; ஆனால் அச்சண்டாளர்கள் இறங்கி வந்து என்னை யுள்ளே யிழுத்துக்கொண்டு போக முயன்றார்கள்; நல்லவேளையாய் இப்புண்ணிய புருடன் எனக்கு உதவியாய் வாராதிருந்தால் நான் தப்பித்துக் கொள்ள முடியவே முடியாது; இப்போது கடவுள் தயவாலும், உங்கள் முயற்சியாலும் அச்சண்டாளனிடமிருந்து அடியோடு தப்பித்துக் கொண்டேன்" என்றாள்.

அவள் இவ்வாறு கூறியவற்றை, அனைவரும் மிக்க கவனமாய்க் கேட்டார்கள். கடைசியில் ஆனந்தலிங், இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணனை நோக்கி "சரி; இப்போது உன் எண்ணம் என்ன?" என்றான்.

பால:—"இப்போது இன்னமும் இதைப்பற்றி விவகரித்துக் கொண்டிருப்பதில் ஒரு பயனுமில்லை; அப்படி நாம் அவனைப் பிடித்தாலும் அவன் தற்காப்பிற்காகக் கிருஷ்ணாராஜைக் கொன்றதாக ருசுப்படுத்திவிடுவான்; இவர்களுக்குள் முன்பின் பலவிவகாரங்கள் நடந்திருந்தாலும் நியாய சபையில் இந்த ஒன்றைப்பற்றிமட்டும் கவனிக்கப்படுமேயன்றி மற்றவைகள் கவனிக்கப்படமாட்டா; மேலும் அச்சம்பவங்கள் அன்னிய நாட்டில் நடந்தவை" என்றான்.

ஆனந்த:—"சரிதான்; நீ கூறியபடி யவாவர்கள் அபிப்பிராயம் வெவ்வேறு; மார்க்கங்களும் வெவ்வேறு; அவரவர்கள் மார்க்கம் அவரவர்களுக்கு; உன் அபிப்பிராயப்படி

நீ இந்த உளவை எனக்கு முன் கண்டு பிடிக்க வேண்டுமென்று முயன்றாய்; என்னிடம் இம்மாது சிக்கியதே நான் யாவும் உனக்கு அறிவிக்க வெண்ணி யுன்னை வரவழைத்தேன்." என்றான்.

பால:—"தொழிலில் கௌரவமடைய ஒவ்வொருவரும் முயல வேண்டியதும், அதற்காகத் தாம் கண்டறிந்த உளவுகளை யொருவர்க்கு வெளியிடாமலிருப்பதும் இயற்கையே; இதைக் குற்றமாகக் கருதலாகாது" என்றான்.

ஆனந்த:—"நீ இவ்வாறு அபிப்பிராயப்படுவதற்கு நான் உண்மையாகவே சந்தோஷப்படுகிறேன்; சரி இனி அவரவர்கள் வேலையைக் கவனிப்போம்" என்றான்.

பாலகிருஷ்ணன் உடனே விடை பெற்றுச் சென்றான். ஆனந்தஸிங் வரதப்பனை நோக்கி, "துரிதமாக ஒரு வண்டி கொண்டுவா" என்றான். அவன் சென்றதே ஆனந்தஸிங் தந்தி கொடுத்துவிட்டுத் திரும்பிவந்த சம்பு என்பவனுடைய உதவியைக் கொண்டு தன் சாமான்களைச் சீக்கிரம் மூட்டை கட்டிப் பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்தான். வண்டி வருவதற்குள் ஆனந்தஸிங் கமலநாயகியை நோக்கி "அம்மா! இரண்டு மூன்று நாட்கள் என் வீட்டிலிரு; என் வீட்டில் ஒரு காரியஸ்தி மட்டுமே யிருக்கிறாள்; அவள் மிக்க யோக்கியமான பெரிய மனுஷி; நீ அதையும் சொந்த வீடாகப்பாவித்து இருக்க வேண்டும்; நான் அச்சண்டாளரை யெவ்வகையிலும் பிடித்து வந்து உன் வஞ்சம் தீரும்படியான மார்க்கம் தேடுகிறேன்; நீ யதைப்பற்றிக் கலக்கமடைய வேண்டாம்; அவனைத் தண்டிக்க முடியாதென்று கருத வேண்டாம்; அதற்கு மார்க்கமிருக்கிறது; இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் சட்டத்தின் கருத்துக்களைச் சரியாய்க்

கவனிக்கவில்லை; இப்போது அதைப்பற்றி விவரிக்க அவகாச மில்லை" என்றான்.

கமலநாயகி "ஆ! உமக்கு நான் நன்றியை யெவ்வாறு செலுத்துவேன்! தங்கள் கட்டளைப்படியே நடக்க ஆயத்தமா யிருக்கிறேன்" என்றாள். ஆனந்தஸிங், வாதப்பன் கையில் தன் வீட்டுக் காரியஸ்திக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து அவனையும் கமலநாயகியையும் வண்டியிலேற்றித் தன் வீட்டிற் கனுப்பிவிட்டுத் தன் சாமான்களையும், மாறுவேட உடைகள் நிறைந்த பெட்டிகளையும் எடுத்துக்கொண்டு சம்புவோடு வேறொரு வண்டியில்ஏறி இரயில் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டான்.

ஆனந்தஸிங், ஸ்டேஷன் அருகிற் செல்லும்போது விசுவநாதன் வாயிற்படியில் நின்றிருந்தான். ஆனந்தஸிங் அவன் அருகில் சென்றதும் 'எல்லாம் ஆயத்தமா?' என்றான். விசுவநாதன் "வண்டி ஆயத்தமாக விருக்கிறது; முன் சென்றவண்டி இரவு ஏழுமணிக்குத் தானூர்போய்ச் சேருகிறது; நாம் இப்போது புறப்பட்டால் மாலை ஐந்து மணிக்குப்போய்ச் சேரலாமென்று கூறுகிறார்கள்" என்றான்.

ஆனந்தஸிங், "தந்தி கொடுக்கப்பட்டதா?" என்றான்.

விசுவநாதன், "தந்தி முன்னமேபோய்ச் சேர்ந்து விட்டது" என்றான். உடனே ஆனந்தஸிங் கொண்டுவந்த பெட்டிகள் உள்ளே மேடைமேல் கொண்டுபோய் வைக்கப்பட்டன. ஒரு எந்திரவண்டியும் வேறு இரண்டு வண்டிகளும் கோக்கப்பட்ட ஒரு வண்டித் தொடர் ஆயத்தமாக வந்து நின்றது. உடனே ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் பெட்டிகளோடு ஒரு வண்டியில் ஏறினார்கள். விசுவநாதன் வாங்கி ஆயத்தமாய் வைத்திருந்த தின்பண்டங்களும் வண்டியில் வைத்துக்கொள்ளப்பட்டன. வண்டி உடனே புறப்பட்டது.

ஆனந்தஸிங் வண்டியோடுகூட வரும் கார்ட் என்ற

காப்பாளனை நோக்கி, "முன்னே சென்ற வண்டியை நாம் எந்த விடத்தில் சந்திப்போம்?" என்று கேட்டான். அதற்குக் கார்ட் "1-30 க்கு இடையூர் ஸ்டேஷனில் சந்தித்து முந்திச் செல்வோம்" என்றான்.

அதன் பிறகு ஆனந்தலிங்கும் விசுவநாதனும் நடந்த சங்கதிகளைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டே சென்றார்கள். ஆனந்தலிங் இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் கூறிய சங்கதிகளையும், கமலநாயகி கூறிய சமாசாரங்களையும் கூறிய பின் "பாலகிருஷ்ணனுக்கு அண்ணுசாமிப்பிள்ளை இன்னுரென்று தெரிந்ததால் அவன் சுலபமாய் விஷயத்தையறிந்து கொண்டான்; அவன் தக்க ருசுவில்லாமலே அந்த வேலைக்காரனைச் சிறை செய்தபோது அவனிடத்தில் ஏதோ விஷயம் இருக்கிறதென்று எனக்குப் புலப்பட்டது; ஆனல் அவன், 'அந்த மறவசேனன்மேல் கொலைக்குற்றம் சாற்றினல் அவன் தற்காப்பிற்காகக் கொன்றதாய்க் கூறித் தப்பித்துக் கொள்வான்' என்று கருதுவது தவறு; தற்காப்பு வேறு, ஒருவன் தனக்கு எவ்விதக்கெடுதி செய்யக்கருதியிருந்தாலும் அவனைத் தந்திரமாய் வரும்படி செய்து வழியில் மறைந்திருந்து கொல்வது வேறு; மேலும் இதில் அவன் தற்காப்பிற்காகக் கொல்லவில்லை யென்பதற்குப் பலமான இரண்டு அத்தாட்சிகள் இருக்கின்றன; ஒன்று - தற்காப்பிற்குக் கொன்றவனுயின் உடனே விஷயத்தை யதிகாரிகளுக்குத் தெரிவித்துவிட் டிருக்கவேண்டும்; இன்னெரு அத்தாட்சி - தற்காப்பிற்காக அடித்திருந்தால் இறந்தவனுடைய தேகத்தின் முன்பக்கம் காயம் பட்டிருக்கவேண்டும்; பின்பக்கம் பட்டிருக்கும் அடியே இவன் பின்னல் பதுங்கியிருந்து முன்னே செல்கிறவனை யடித்தான் என்று காட்டுகிறது; இதில் உனக்கு விளங்காதவையேதேனு மிருக்கின்றனவோ?" என்றான்.

விசுவநாதன் "இப்போது மறவசேனனுடைய நோக்கம் எதுவாயிருக்கும்? என்ன உத்தேசமாய்ச் செல்கிறான்?" என்றான்.

ஆனந்த:—அவன் மிக்க தந்திரசாலி யென்பதில் சந்தேகமேயில்லை; அவன் ஒரு இடத்திற்குப் போக்குக்காட்டி ஒரு இடத்தில் மறைந்து கொள்ளத்தக்கவன்; கமலநாயகியைத் தக்க சமயம் பார்த்துக் கொன்றுவிடவேயிருந்தான் என்பது நிச்சயம்; இப்போதவள் தப்பித்துக்கொண்டதால் அவள் விஷயத்தில் அவனுக்கு மிக்க அச்சமேயிருக்கும்; ஆகையால் இந்த நாட்டில் தான் இருப்பது ஆபத்தென்று கருதியிருப்பான்; அதோடு அவளுக்கு வாதப்பன் துணையாய் நின்றதால் தன்மேல் கெட்ட எண்ணங் கொண்டுள்ள வேறு யாரோகூட இருக்கிறார்களென்று தெரிந்து கொண்டிருப்பான்; யாவையும் கருதி அவன் அன்னிய நாட்டிற்குச் செல்லவே கருதி யிருப்பான்.

விசுவ:—நாம்தான் பிரத்யேகவண்டியில் புறப்பட்டு அவனுக்கு முன் தானூர்போய்ச் சேரப்போகிறோமே; அப்படியிருக்க துறைமுக அதிகாரிகளுக்கும் தானூர்ப் போலீஸ்காரருக்கும் என் தந்திகொடுக்க வேண்டும்?

ஆனந்த:—இத்தகைய சந்தர்ப்பங்களில் எவ்வளவு முன்சாக்கிரதையும் அவசியமே; நாம் பிரத்யேக வண்டியேறிச் சென்றாலும், எதிர்பாராத ஏதாவது அசந்தர்ப்பங்களால் வழியில் தடுக்கப்பட்டு, அவன் முன்பு தானூர் போய்ச் சேர்ந்து கப்பலேறிவிட லாகும்; ஆகையால் அவர்களைக் கப்பலில் ஏற்றிக்கொள்ளாத படிக்குத் துறைமுக அதிகாரிகளுக்கும், அவர்கள் அந்த இரயில் ஸ்டேஷனில் வந்து சேருமுன் அங்கு ஆயத்தமாய்

வந்திருந்து அவர்களைக் கைது செய்யும்படிக்குப் போலீஸாருக்கும் தந்தி கொடுத்தேன்.

விசுவ:—"கிருஷ்ணராஜின் ஆட்களில் ஒருவன் ஏன் மறுபடி அவ்வீட்டிற்கு வந்தான்? என்ன வஸ்துவுக்காக வந்திருப்பான்?" என்றான்.

ஆனந்த:—அவன், நாம் சமையல் அறையில் பார்த்தோமே-அகோரமான ஒரு உருவம்; அதற்காக வந்திருப்பான்; அவர்கள் கூட்டத்தைச்சேர்ந்த மூன்றாவது மனிதன் முன்னமே ஏற்பாடு செய்து தங்கியிருக்கும் இரகசிய இடத்திற்கு இவர்கள் இருவரும் சென்றபோது அவசரத்திலும் கலக்கத்திலும் அதை யெடுத்துக்கொள்ளாமல் போய் விட்டார்கள்; அங்குச் சென்றபின் 'சே சே! அதை விட்டுவிட்டு வருவது நமக்கு நலமல்ல' வென்று ஆலோசித்தே அவன் அதை யெடுத்துவரச் சென்றான்.

நான் பொருட்காட்சிச் சாலையில் சென்று ஆராய்ச்சி செய்தபோது, அத்தகைய உருவம் அமெரிக்காவின் புராதன குடிகளாகிய அனுகரீகர்களது முக்கிய சடங்குகளில் சம்பந்தப்பட்ட ஒரு பிரதான உருவம் என்று தெரிய வந்தது.

விசுவ:—"கொன்று பிய்க்கப்பட்ட அந்த வெள்ளைச்சேவல், பாத்திரத்தில் இருந்த இரத்தம், சுட்ட எலும்புகள் முதலியவை?" என்றான்.

ஆனந்த:—"அது ஓர் முக்கியமான சடங்கு; அவர்கள் விசேஷமான ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கும்போது அச்சடங்கைச் செய்த பின்புதான் அதில் பிரவேசிப்பார்கள் ; பெரும்பாலும் அதற்கு நரபலி கொடுப்பது வழக்கம்; அப்போது ஒரு மனிதன் உயிரோடிருக்கும் போதே அவன் இருதயத்தைத்

தோண்டியெடுத்து அதன் துடிப்பு அடங்குமுன்பே அவர்கள் பேய்த் தெய்வத்திற்கு நிவேதனம் செய்வார்கள்; அது கிடைக்காத பட்சத்தில் வெள்ளைச் சேவலை உயிரோடு பிய்த்து விடுவதும், ஆட்டுக்குட்டியை யுயிரோடு தீயிலிட்டுப் பொசுக்கி விடுவதும் அவர்கள் வழக்கம்," என்ருன்.

அதன் பிறகு இவர்கள் வேறு விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டே சென்ருர்கள். வண்டி முன்னே சென்ற வண்டியைச் சந்திக்கவேண்டிய ஸ்டேஷனை நெருங்கும்போது வண்டியின் கார்ட் ஆனந்தலிங்கிடம் வந்து "அந்த வண்டி வலது பக்கம் நிறுத்தப்பட்டிருக்கிறது" என்ருன்.

ஆனந்தலிங் "நான் கூறிய சங்கதி?" என்றதும் கார்ட் "ஆகா, முன்னமே வண்டி யோட்டிக்கு நான் கட்டளை யிட்டிருக்கிறேன்; மறுபடியும் எச்சரிக்கை செய்கிறேன்" என்ருன். இதன் பயனுக இவர்களிருக்கும் வண்டித் தொடர் அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் வண்டித் தொடரைத் தாண்டுமட்டும் மெதுவாய்ச் சென்றது. இடையில் இன்னெரு விஷயம் நடைபெற்றது; அதாவது வண்டி ஸ்டேஷனை நெருங்கும்போது கார்ட் வண்டியின் வலது பக்கம் ஒரு பலகையை யெடுத்து மாட்டினுன். அதில், "பாதையைப் பரீட்சிக்கும் பிரதம இன்ஜினீர்" என்பது அச்சு எழுத்துக்களால் குறிக்கப்பட்டிருந்தது.

ஆனந்தலிங் தன் வண்டிச் சாளரத்திலிருந்த கண்ணுடிக் கதவுகளைமட்டும் மூடிவிட்டு அவற்றின் வழியாய் அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் வண்டிகளில் ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டே சென்றபோது ஒரு வண்டியில் மறவசேனனும், அவன் காரியஸ்தனுகிய குரூரலிங்கனும்,

இன்னும் இருவரும் உட்கார்ந்து கொண்டு இவர்கள் வண்டியையே உன்னிப்பாய் நோக்குவதைக் கண்டான்.

ஆனந்தஸிங் இருக்கும் வண்டி பிரத்தியேக (ஸ்பெஷல்) வண்டியாதலால் அங்கு நிற்காமல் சென்றது. அதைக் கடந்து இரண்டாவது ஸ்டேஷன் சென்றதும் தட்டென்று நின்றது. ஆனந்தஸிங் அங்கு இறங்கி விட்டான். அவன் காத்தில் ஒரு சிறு மூட்டையும் ஒரு பிரயாணப்பையு மட்டு மிருந்தன. வண்டியின் கார்டும் இறங்கி அந்த ஸ்டேஷன் அதிகாரியிடம் என்னவோ குசு குசு வென்று கூறி ஆனந்த ஸிங்கைச் சுட்டிக்காட்டி அந்த அதிகாரியை அவனருகில் நிறுத்திவிட்டு "35 வது நம்பர்—மூன்றுவது அறை; மறக்கவேண்டாம்" என்று கூறிவிட்டுத் துரிதமாய்த் தன் வண்டியிலேறி வண்டியை விடும்படி கட்டளை யிட்டான். வண்டி புறப்படும் போது ஆனந்தஸிங் வண்டியிலிருக்கும் விஸ்வநாதனை உற்றுநோக்கினான். விஸ்வநாதன் "எல்லாம் நினைவிலிருக்கிறது" என்றான். வண்டியும் புறப்பட்டு விட்டது.

---

## 8-வது அத்தியாயம்.

வண்டி சென்றதும் ஸ்டேஷன் அதிகாரி ஆனந்தஸிங்குக்கு மிக்க மரியாதையாய் வந்தன மளித்து, "பின்னாலிருக்கும் இரண்டு ஸ்டேஷன்களிலும் அவ்வண்டி தண்ணீர் எடுத்துக் கொண்டும், சாமான் வண்டிகளைச் சேர்த்துக் கொண்டும் வரவேண்டும்; ஆகையால் இங்கு வர அரை மணி நேரம் செல்லும்; தாங்கள் இதோ அருகில் ஸ்டேஷனுக்குப் பின்னாலிருக்கும் என் வாசஸ்தலத்திற்கு வந்து சிற்றுண்டி யருந்திச் செல்லலாம்; அருந்தும்படி வேண்டிக் கொள்கிறேன்; உங்களைக் காணக் கிடைத்ததற்கு மிக்க சந்தோஷமடைகிறேன்" என்றான்.

ஆனந்த:—"தங்கள் அன்பிற்கு மிக்க வந்தனம்; நான் என் சாப்பாட்டு வேலைக்காகப் பத்து நிமிடங்களுக்குமேல் செலவழிக்க முடியாது; பிறகு எனக்குச் சில நிமிடங்கள் ஒரு தனி யறை வேண்டும் ஏனெனில்—" என்று ஏதோ சில சங்கதிகள் கூறினன்.

ஸ்டேஷன் அதிகாரி புன்னகையோடு "அவசியம் செய்யலாம்; அதற்கு ஸ்டேஷனிலுள்ள என் சொந்த அறையே தகுதி" யென்றான். உடனே ஸ்டேஷன் அதிகாரி ஆனந்தஸிங்கைத் தன் வாச ஸ்தலத்திற்கு அழைத்துச் சென்று அவனுக்குச் சிற்றுண்டி யளித்தபின் அவனை இட்டு வந்து தன் அறையில் விட்டுவிட்டு, அவனிடம் "வண்டிவர ஐந்து நிமிடங்கள் இருக்கும்போது வருகிறேன்" என்றான். ஆனந்தஸிங் "தங்கள் வேலையில் தங்களுக்குத் தொந்தரை வேண்டாம்; நானே என் வேலையை முடித்துக் கொண்டு தங்களிடம் வருகிறேன்; பின்னால் நடக்க வேண்டிய விவகாரம் மட்டும் மிக்க சாக்கிரதையாய் நடக்கவேண்டும்; தாங்கள் என் பிரியத்திற்கு மாறாய்ப் பலவந்தப் படுத்தி அந்த அறையில் என்னை ஏற்றுவதாக அதிலிருப்பவர்களுக்குப் புலப்படவேண்டும்" என்றான்.

ஸ்டேஷன் அதிகாரி ஆனந்தஸிங்கை யறையில் விட்டுச் சென்ற சுமார் பத்து நிமிடங்களுக்குள் அவன் தொழில் செய்யும் அறைக்குள் ஒரு வயது முதிர்ந்த மகம்மதிய குரு வருவதைக் கண்டு "யாரையா! பெரியவரே! இங்குப் பிரயாணிகள் வரக்கூடாதே..." என்று கூறிக்கொண்டேயிருக்கையில் அந்த ஆள் பேசாமல் வந்து ஸ்டேஷன் அதிகாரி யுட்கார்ந்திருக்கும் மேஜையின் எதிரிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தான். ஸ்டேஷன் அதிகாரி அவன் துணிகரத்தைக்கண்டு கோபமடைந்தானெனினும் அவன் உருவத்தைக்கண்டு கடிந்து கூற மனம் வராமல் அவனை யுற்று

நோக்கினன். அவனுக்கு வயது குறைந்தது எழுப திருக்கும் என்று தோன்றியது. அவன் சுமார் ஆறடி யுயரமுடையவனுய்க் காணப்பட்டான். அவன் தாராளமான காற்சட்டையும், பெரிய நீண்ட மேல் அங்கியும், பிரம்மாண்டமான தலைப்பாகையும் யாவும் செம்மண் நிறமாயிருந்தன; பஞ்சுப் பூப்போல வெளுத்த மார்பின்கீழ்த் தொங்கும் தாடி செழித்து வளர்ந்திருந்தது; அவன் கழுத்தில் பாரமான மூன்று நான்கு மணி மாலைகள் இருந்தன; அவன் வலது காத்தில் காரோபாமணிக்கோவை யொன்றிருந்தது; அவன் அம்மணிகளை யெண்ணிக்கொண்டே "பிஸ்மில்லா" என்று உட்கார்ந்தான்.

ஸ்டேஷன் அதிகாரி இரண்டொரு நிமிடங்கள் ஒன்றும் பேசாமல் துரிதமாய்த் தமது வேலையைச் செய்து கொண்டிருந்தார். அவர் நினைப்பு ஆனந்தஸிங்குக்கு உதவி செய்யும் நோக்கத்திலேயே யிருந்தது. அவர் வேலையும் முடிந்தது. வண்டி வருவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன் அடிக்கவேண்டியமணி அடிக்கப்பட்டது. ஸ்டேஷன் அதிகாரி சட்டென்றெழுந்து "சாஹீப்! தாங்கள் இங்கு இருப்பது எங்கள் மேல் அதிகாரிகளின் சட்டத்திற்கு விரோதம்; ஆச்சு, வண்டி வரப்போகிறது; உங்களுக்கு அது வரையில் உட்கார்ந்திருக்க இடம் காட்டுகிறேன் வாருங்கள்" என்றான்.

அப்போது ஹாஜி கையமர்த்தி அந்நாட்டுப் பாஷையில் தமது சொந்தக்குரலில் "உட்காரும்; நீர் என்னை யறிந்துகொள்ளாததால் என் மாறு வேடம் சரியானதே; இன்றேல் அப்படிப்பட்ட துஷ்டரைப் பிடிக்கமுடியாது" என்றார்.

ஸ்டேஷன் அதிகாரிக்கு அப்போதுதான் அந்த ஆள் ஆனந்தஸிங்கே யென்று புலப்பட்டது. அவனுக்கு

ஆனந்தலிங்கின் சாமார்த்தியச் செயல் அனுபவமாய்க் கொஞ்சங்கூடத் தெரியாது. ஆகையால் அவனுக்குண் டான வியப்பிற்கு அளவேயில்லை. சற்று நேரத்திற்குள் வண்டி வந்தது. அந்த ஸ்டேஷனில் வண்டி பத்து நிமிடம் தங்கியிருந்தது. ஏற்றவேண்டிய சாமான்களெல்லாம் ஏற்றியாயின. வண்டி புறப்படச் சமிக்கையும் காட்டப் பட்டு ஆயிற்று. அச்சமயம் ஸ்டேஷன் அதிகாரி ஒரு மகம் மதியக்கிழவனை யிழுத்துவந்து, தமது அறையின் கதவைத் திறந்து உள்ளே யேற்றுவதைக் கண்ட மறவசேனனும் குரூரசிங்கனும் தடுத்தார்கள். கிழவனும் அவ்வண்டியில் ஏறமாட்டேனென்கிறான்.

ஸ்டேஷன் அதிகாரி வண்டியிலிருப்பவர்களை நோக்கி "இவ்வறையில் நால்வரே யிருக்கிறீர்கள்; இன்னும் நால் வர்க்கு இடமிருக்கிறது" என்று கூறிவிட்டுத் துலுக்கக் கிழவரை நோக்கி "வண்டி நகர்கிறதையா; இதில் நீர் ஏறுவிட்டாலோ நாளைப்பகல் வரும் வண்டியில்தான் செல்ல வேண்டும்; ஏறும்" என்று பலவந்தமாக வண்டியில் ஏற்றி யுள்ளே தள்ளிவிட்டு வண்டி நகர்ந்துகொண்டே யிருக்கை யில் கதவை மூடித் தாளிட்டு விட்டார். வண்டியும் ஓடத் தொடங்கியது.

மகம்மதிய குரு இரண்டொரு விநாடி கோபத்தோடு முணமுண வென்று என்னமோ கூறிவிட்டுப் பிறகு பேசா மல் உட்கார்ந்து வாயால் என்னமோ மந்திரம் முணமுண வென்று கூறிக்கொண்டே கையிலிருக்கும் காரோபா மணி களை யொவ்வொன்றாகப் புரட்டத் தொடங்கினர்.

மறவசேனனும், அவன் காரியஸ்தனும் ஸ்டேஷன் அதிகாரியை மனம்போனபடி வைதுவிட்டபின் குரூர சேனன் கிழவரை நோக்கி "கிழவரே! எங்கே செல்கிறீர்?" என்றான். கிழவர், "தும் பாத் மாலும் நை" (உங்கள் பேச்சு

எனக்குத் தெரியாது) என்று காத்தை விரித்து விட்டார். அதன்மேல் அவர்கள் "ஒழியட்டும்; இக்கிழட்டுப் பிணம் எங்காவது போய்ச் சாகட்டும்; நமக்கென்ன ஆகவேண்டியது" என்று பேசிக்கொண்டார்கள்.

கிழவரோ ஆசனத்தில் சாய்ந்து கொண்டு அவர்களை யேறெடுத்துப் பாராமல் கண்களை யேறக்குறைய மூடி மணியைப் புரட்டிக்கொண்டே யிருந்தார். அவர் உதடுகள் அசைவதுமட்டும் தெரிகின்றதேயன்றி வேறு ஒரு சத்தம் கூடக் கேட்கவில்லை.

குரூரஸிங்கன்:—" இம்மகம்மதியர்—அதிலும் குருமார்கள் பிடிவாத முடையவர்கள்..." என்றான்.

மறவசேனன்:—"அவர்கள் எப்படியாவதிருக்கட்டும்; நமது சங்கதியை நாம் கவனிப்போம்; நீ அவளைப் பிடித்து வண்டியில் தூக்கிப் போடாமல் வீணான கலவாத்தால் விட்டுவிட்டது என் மனதிற்கு மிக்க கலவரத்தை யுண்டாக்குகிறது" என்றான்.

குரூர:—"நாம் இன்னும் பிடிவாதம் செய்தால் வண்டிபோய் விடும்போலிருந்தது; இத்தேசச் சட்டம் ஒருவர் பிரியத்திற்கு மாறாக அவர்களை யழைத்துச் செல்ல இடந்தாராது; அது பெருங் குற்றம்; மேலும் அவளுக்குத் துணையாக வந்தமனிதன் தற்செயலாக வந்தவனல்லவென்பது எனக்குப் புலப்பட்டது; ஏனெனில் அவன் முன்பு நம்மிடம் தோட்டவேலை செய்துகொண்டிருந்த வரதப்பன் என்றே நான் கருதுகிறேன்; அப்படியாகவே யிருக்கும் பட்சத்தில் அவன் ஏதோ கெட்ட எண்ணங் கொண்டே அவளுக்கு உதவி செய்திருக்க வேண்டும்; அவன் பின்னால் தொடர்ந்து வந்தவனென்பதும் தெரிந்தது; அப்படியிருக்க நான் தங்கள் ஆலோசனையின்படியே அவசரமாய் அச்சமயம் குழப்

பம் உண்டாக்கியிருந்தால் கடைசியில் நமது விஷ யம்..." என்பதற்குள்,

மறவ:—"போதும் போதும்; விவரம் ஒன்றும் வேண்டாம்; நடந்தது நடந்தாய் விட்டது" என்று கூறிப் பிறகு தாழ்ந்த குரலாய் "அவளை விட்டுவிட்டது பெரிய தப்பிதம்; தெரிகிறதா? நாம் வீண் பயத்தால் ஆலசி யம் செய்ததால் அவள் அடியோடு நழுவி விட்டாள்; இனி யவள் இங்கிருக்குமட்டும் நாம் தலைகாட்டுவது மோசம்; "கி" ஒழிந்தானெனினும் அவள் மற்ற வர்களுக்குத் தூண்டுதலாக விருப்பாள்; மேலும் இன் னொரு விஷயம் இருக்கிறது; நமது தொகை முழு தும் இங்குச் சிக்கிக்கொண்டிருக்கிறது" என்றான்.

குரூர:—"அதைப்பற்றிப் பயமில்லை; அதை யபகரிக்க யாருக்கு அதிகாரமிருக்கிறது; நாம் அங்குக் கப்பல் விட்டிறங்கியதும் வேதநாயகம் பாங்கிக்கு ஒரு தந்தி" என்றதே.

மறவசேனன் கோபத்தோடு "எப்போதும் பெயர் இடம் குறிக்கவேண்டாமென்று பன்முறை கூறியும் உனக்கு விளங்கவில்லை" என்றான்.

குரூர:—"இல்லை யில்லை; நாம் அங்குச் சென்றதும் அங் குள்ள பாங்கிக்கு நமது தொகையை யனுப்பி விடும் படி தந்தி கொடுத்து விடலாம்" என்றான்.

மறவ:—சரி; இருக்கட்டும்; அவள் யார்? அவளைப் பார்த் தால் இந்த நாட்டாள் போல் காணப்படுகிறாள்; அவள் நம்மிடம் வந்து நுழைந்து கொண்டு நமது எதிரிகளு க்கு உளவாயிருப்பதற்குக் காரணம் எனக்கு விளங்க வில்லை.

குரூர:—"காரணமா? அவள் எப்படியோ நமது விவகாரத் தோடு சம்பந்தப்பட்டவளாக விருக்கவேண்டும்; இன்

றேல் ஆபத்துக்குத் துணிந்து இவ்வளவு தூரம் அவள் வேலே செய்ய மாட்டாள்" என்றான்.

அதன் பிறகும் அவர்கள் இன்னும் என்னென்னமோ விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். இஸ்லாமியக் கிழவர் போல் மாறு வேடமணிந்திருந்த ஆனந்தஸிங் இவர்கள் சம்பாஷணையில் ஒரு வார்த்தைகூட விடாமல் யாவும் கேட்டுக்கொண்டிருந்தான்.

கடைசியில் வண்டி துறைமுக நகரமாகிய தானூர் போய்ச் சேர்ந்தது. மேடைமேல் கூலிக்கு மூட்டை தூக்குவோரும், ஸ்டேஷனுக்கு வந்து காத்திருந்து தங்கள் தங்கள் சுற்றத்தாரை அழைத்துக்கொண்டு போக வந்திருப்போருமாகிய ஜனங்கள் கூட்டமாய் நிறைந்திருந்தார்கள். வண்டி மேடை யருகில் சென்று நின்றது. இஸ்லாமிய குரு முன் பக்கம் உட்கார்ந்திருந்தபடியால் முன்னே இறங்கினர். இவர்கள் இருக்கும் அறையின் எதிரில் ஐந்தாறு பேர் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் விசுவநாதனும் ஒருவன். கிழவர் கீழிறங்கியதும் அவனிடம் 'பக்கத்தறை' யென்றார். ஏனெனில், மறவசேனன் வேலேயாட்களில் இருவர் அங்கிருந்தார்கள்; அவன் சாமான்களில் சிலவும் அதில் இருந்தன.

விசுவநாதன், தன் கூட விருந்தவர்களில் இருவர்க்கு அதைக் கூறுவதற்குள் அவர்கள் சங்கதியறிந்து கொண்டு சட்டென்று போய் அவ்வண்டியி லிருந்தவர்களை யிறங்க வொட்டாமல் தடுத்துவிட்டார்கள். நடக்கும் சங்கதியை யறியாத மறவசேனனும், குரூரசிங்கனும், அவர்களின் ஆள் ஒருவனுங் கீழே யிறங்கினார்கள். அந்த ஆள் ஒரு பெட்டியை யெடுத்துவந்து கீழே வைத்துவிட்டு மற்ற பெட்டிகளை யெடுத்து வர மறுபடி வண்டியில் ஏறினான். கிழவனாகிய ஆனந்தஸிங் சட்டென்று தன் ஜேபி

186506

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மா த வி * *

# * * மா த வ ன்

அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதததில் அச்சிடப்பட்டது. விலை ரூ. 1—0—0

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்க்கு 30-7-26 வரையில் அணா 12.

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளவையும், நெஞ்சு திடுக்கிடக் கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக் கூடியவையுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் பலவித நடவடிக்கைகளுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களெல்லாம் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றன வென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# “ஆனந்தபோதினி”

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமிமுதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும்விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 48 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரிக்காப்பி இனாம்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | தினகரசுந்தரி | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | பத்மாஸனி ... | 0 | 14 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2-பாகமும் ... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனந்தஸிங் .. | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ... | 10 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| | | | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the “Ananda Bodhini” Press, Madras.